Saturday மெயில்

01 - 47

21-08-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=

සැටඩේ මේල්

A Fascinating Weekly Bulletin

# முதலையின் ஆரூடம் பலிக்குமா?



## அவுஸ்திரேலியாவில் இன்று பொதுத்தேர்தல்






அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமாவை முஸ்லிம் என்று நம்பும் அமெரிக்கர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



பராக் ஒபாமா அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவியேற்று ஒன்றரை வருடங்களுக்கும் கூடுதலான காலம் கடந்து விட்டபோதிலும் இன்னமும் கூட கணிசமான எண்ணிக்கையிலான அமெரிக்கர்கள் அவரை ஒரு முஸ்லிம் என்றே தவறாக நம்பிக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிய வந்திருக்கிறது.

பியூ ஆராய்ச்சி நிலையத்தினால் (Pew Research Center) மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வொன்றின் பிரகாரம் ஐந்து அமெரிக்கர்களில் ஒருவர் ஒபாமாவை முஸ்லிம் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்.இத்தகையோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறதே தவிர குறைவதாக இல்லை.

ஒபாமாவை ஆதரிப்பவர்களை விடவும் அவரை எதிர்ப்பவர்கள் மத்தியிலேயே அவர் ஒரு முஸ்லிம் என்ற நம்பிக்கை பரவலாகக் காணப்படுகிறது.

ஒபாமாவை முஸ்லிமென்று 18 சதவீதமான அமெரிக்கர்கள் கூறுகிறார்கள்.இவ்வாறு கூறும் அமெரிக்கர்களின் எண்ணிக்கை கடந்த வருடம் மார்ச் மாதத்தில் 11 சதவீதமாக இருந்தது.வயது வந்த அமெரிக்கர்களின் மூன்றிலொரு பங்கின் [34 சதவீதமானோர்] ஒபாமாவை கிறிஸ்தவர் என்று கூறுகின்றார்கள்.கடந்த வருடம் அவரை கிறிஸ்தவர் என்று கூறியவர்களின் எண்ணிக்கை 48 சதவீதமாக இருந்தது என்று பியூ ஆராய்ச்சி நிலையம் ஆய்வின் முடிவுகள் வெளியிட்ட பின்னர் கூறியிருக்கிறது.

நியூயோர்க்கில் முஸ்லிம் தீவிரவாதிகள் 9 வருடங்களுக்கு முன்னர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களினால் நிர்மூலம் செய்யப்பட்ட உலக வர்த்தக நிலையத்தின் இரட்டை கோபுரங்கள் அமைந்திருந்த இடத்துக்கு அண்மையாக முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றை நிர்மாணிப்பதற்கான யோசனைக்கு ஆதரவான முறையில் ஒபாமா கருத்துத் தெரிவித்ததற்கு முன்னதாக இம்மாத ஆரம்பத்திலேயே இந்த ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கர்களில் கணிசமான எண்ணிக்கையானவர்கள் ஒபாமாவை முஸ்லிம் என்று நம்புவதற்கு முக்கியமான காரணம் அவரின் அரசியல் எதிரிகளினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தவறான பிரசாரங்களேயாகும் என்று வெள்ளை மாளிகையின் மத விவகார ஆலோசகர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி தனது சொந்த கிறிஸ்தவ நம்பிக்கையில் தளராத ஊக்கமும் தனிப்பட்ட முறையில் அர்ப்பணிப்பையும் கொண்டவராக இருந்து வருகின்றபோதிலும் அவரது மத நம்பிக்கை மற்றும் பண்பு விழுமியங்கள் குறித்து குறிப்பிட்ட பிரிவினர் தவறான பிரசாரங்களைச் செய்வதில் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று மதவிவகார ஆலோசகர் ஜோசுவா டூ பொயிஸ் கூறியிருக்கிறார்.

ஒபாமா ஒரு முஸ்லிம் என்ற நம்பிக்கை குடியரசுக்கட்சியின் மத்தியில் அதுவும் குறிப்பாக அக்கட்சியினரில் பழமைவாத சிந்தனையில் ஊறிப் போனவர்கள் மத்தியிலேயே கடுமையாக அதிகரித்திருக்கிறது.அதேவேளை ஒபாமா முஸ்லிம் என்று கூறும் சுயாதீனமானவர்களின் எண்ணிக்கையும் கணிசமான அளவுக்கு அதிகரித்தே காணப்படுகிறது என்று பியூ ஆராய்ச்சி நிலையம் கூறியிருக்கிறது.

எவ்வாறெனினும் ஒபாமாவை முஸ்லிம் என்று கூறுகிற ஜனநாயகக் கட்சிக்காரர்களின் எண்ணிக்கையிலும் சிறிய மாற்றமே ஏற்பட்டு வந்திருக்கிறது என்றும் அந்த நிறுவனம் குறிப்பிட்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

# முதலையின் ஆரூடம் பலிக்குமா?

அவுஸ்திரேலியாவில் இன்று பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. ஆளும் தொழிற்கட்சிக்கும் பிரதான எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சிக்கும் இடையே கடுமையான போட்டியாக இத் தேர்தல் அமைந்திருப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

அவுஸ்திரேலியாவின் முதற்பெண் பிரதமர் என்ற பெருமையைத் தனதாக்கிக் கொண்ட பிரதமர் ஜூலியா கிலார்ட் பதவிக்குவந்த ஒரு சில மாதங்களில் பெரிய சவாலை எதிர்நோக்குகிறார். தொழிற்கட்சி பிரதமராக இருந்த கெவின் ருட்டின் மக்கள் செல்வாக்கு வீழ்ச்சியடையத் தொடங்கியதாக அபிப்பிராய வாக்கெடுப்புகளின் மூலமாகத் தெரியவந்ததையடுத்து அவரைத் திடீரென்று பதவி கவிழ்த்து பிரதமராக்கிக் கொண்ட ஜூலியா கிலார்ட் இன்றைய தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமராவார் என்றும் பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால், தொழிற்கட்சியின் முக்கிய தலைவர்கள் கெவின் ருட்டை பதவி கவிழ்த்த விவகாரத்தில் கடைப்பிடித்த கடுகடுப்பான அணுகுமுறை தொடர்பில் விரக்தியுற்றிருக்கும் அவுஸ்திரேலிய வாக்காளர்கள் தனது கட்சியை மீண்டும் பதவிக்குக் கொண்டுவருவார்கள் என்று கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவரான ரொனி அபோட் நம்புகிறார்.

தேர்தலில் வெற்றி பெறக்கூடிய கட்சி எது என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்காக அவுஸ்திரேலியாவின் டார்வின் பகுதி வனவிலங்குப் பூங்காவில் உள்ள ஹரியென்ற பெயர் கொண்ட முதலையின் 'ஆரூடச் சக்தியை' பயன்படுத்துவதற்கு அதன் பராமரிப்பாளர்கள் தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

5 மீற்றர் நீளமுடைய ஹரி ஏற்கனவே முக்கியமான பல உலக நிகழ்வுகளின் விளைவுகள் குறித்து ஏற்கெனவே எதிர்வுகளைக் கூறியிருக்கிறதாம்.

அண்மையில் தென்னாபிரிக்காவில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் ஸ்பெயின் அணி வெற்றிபெறும் என்று ஜேர்மனியில் உள்ள எண்காலி விலங்கு (ஒக்ரோபஸ்) போல் எதிர்வு கூறியிருந்தது. இதனால் போல் உலகில் பிரபல்யம் பெற்றுவிட்டது.

போலைப் போன்றே இந்த முதலை ஹரியும் ஸ்பெயின் அணியே உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக் கொள்ளும் என்று எதிர்வுகூறியதாக காப்பாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ஹரி வளர்க்கப்படும் அடைப்புக்கு மேலாக அவுஸ்திரேலிய தேர்தலில் போட்டியிடும் பிரதான கட்சிகளின் தலைவர்களின் புகைப்படங்கள் இணைக்கப்பட்ட சம அளவான எடையுடைய இரு கோழிகள் தொங்கவிடப்படும். எந்தக் கோழி மீது ஹரி பாய்ந்து பிடித்து விழுங்குகிறதோ அந்தக் கோழியுடன் இணைக்கப்பட்ட புகைப்படத்தில் உள்ள தலைவரின் கட்சியே தேர்தலில் வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

டார்வின் வனவிலங்குப் பூங்காவில் உள்ள பேர்ட் என்று அழைக்கப்படும் இன்னொரு முதலையும் இத்தகைய ஆருடவல்லமை கொண்டதாக விளங்குவதாகக் கூறப்படுகிறது டார்வின் நகரில் சிலவாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற மிகப்பெரிய குதிரைப் பந்தயத்தில் வெற்றியாளரை பேர்ட் ஆர்டம் கூறியதாக பராமரிப்பாளர்கள் கூறுகிறார்கள்.

## செய்திப் பத்திரிகையாக இருந்தால்...




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனுபவம் புதுமை இவரிடம் கேட்டோம்


பாராளுமன்றத்தை பார்வையிட வரும் பாடசாலை மாணவர்களுக்கு எம்.பி.க்கள் முன்னுதாரணமாக நடந்து கொள்ள வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் புதிய எம்.பி.யான எரான் விக்ரமரட்ண தெரிவித்தார்.

Saturday மெயிலுக்கு வழங்கிய பேட்டியிலேயே எரான் விக்ரமரட்ண இந்த வலியுறுத்தலை விடுத்தார்.

அவரது பேட்டியின் விபரம் வருமாறு;

**கேள்வி: உங்களது கல்வி, குடும்ப பின்னணி பற்றி?**

**பதில்:** கொழும்பு றோயல் கல்லூரியில் நான் எனது பாடசாலை கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டேன். பின்னர் லண்டன் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம் பற்றிய எம்.எஸ்.சி. பட்டப் படிப்பையும், பொருளாதாரம் மற்றும் அரசியல் பற்றிய பி.ஏ.பட்டப்படிப்பையும் நிறைவு செய்துள்ளேன். சிற்றி வங்கியின் உதவித் தலைவராக பணி புரிந்துள்ளேன். பின்னர் என்.டி.பி. வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணி புரிந்தேன். இதன்போதே ஐ.தே.க. தலைமைத்துவம் என்னை அரசியலுக்கு அழைத்தது. தகவல், தொலைத் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் ஸ்தாபகத் தலைவராக நான் இருந்தேன். முதலீட்டு சபையின் பணிப்பாளராகவும் கடமையாற்றியிருக்கிறேன். இதன் பிரகாரம் அரசாங்கம் சார்ந்த பணிகளிலும் நான் ஈடுபட்டிருந்தேன் குடும்பத்தை பொறுத்தவரை மணமுடித்து எனக்கு இரு பிள்ளைகள் இருக்கின்றனர். என்னைத் தவிர இதற்கு முன்னர் குடும்பத்திலிருந்து அரசியலுக்கு யாருமே பிரவேசித்தது இல்லை.



**கேள்வி: உங்களது அரசியல் பிரவேசத்துக்கான நோக்கம் என்ன?**

**பதில்:** இந்த நாட்டு மக்களுக்கு உதவ வேண்டிய தேவை எனக்கு இருக்கிறது. இந்த நாட்டிலுள்ள சகல பிள்ளைகளும் உயர்கல்வி கற்க வேண்டும். இவையனைத்திற்கும் சுபிட்சமான நாடு அவசியம். அமைதியான சூழல் தேவை. இன்று இராணுவ போராட்டம் முடிந்து விட்டது. இந்த நிலைமையில் அனைத்து இன மக்களிடையேயும் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும் இலங்கையில் வாழும் அனைவரிலும் இது எமது நாடு என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். எதிர்கால சந்ததியினருக்கு பொருளாதார ரீதியில் சுபிட்சமானதொரு நாட்டை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

**கேள்வி: முதலாவது பாராளுமன்ற அமர்வு அனுபவம் பற்றி?**

**பதில்:** நான் எனக்கிருக்கும் பொறுப்பை உணர்ந்தேன். குரல் கொடுக்க வழியில்லாத மற்றும் சிறப்புரிமைகள் இன்றி வாழும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி அவர்களுக்காக குரல் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து திடசங்கற்பம் கொண்டேன்.

**கேள்வி: பாராளுமன்றத்தில் எம்.பி.க்களின் செயற்பாடுகள் குறித்து?**

**பதில்:** பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பேச்சுக்களையும், நடத்தைகளையும் இன்னும் முன்னேற்றிக் கொள்ள வேண்டுமென சபாநாயகரும் ஏற்கனவே வலியுறுத்தியிருக்கிறார். பாராளுமன்றத்தை பார்வையிட வரும் பாடசாலை மாணவர்களுக்கு நாம் முன்னுதாரணமாக நடந்து கொள்ள வேண்டும். அது மட்டுமல்லாது ஏனையவர்களிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் நிறையவே இருக்கின்றன.

**கேள்வி: அரசியல் தவிர்ந்த வேறு ஏதேனும் துறைகளில் ஆர்வம் இருக்கிறதா?**

**பதில்:** நிதி பொருளாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் எனக்கு மிகுந்த ஆர்வம் இருக்கிறது. மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த செயற்பட வேண்டும். நாட்டில் அமைதியையும், ஒற்றுமையையும் ஏற்படுத்த வேண்டியதே எமக்குத் தேவை.

**கேள்வி: மக்களுக்கான உங்களது செய்தி?**

**பதில்:** இலங்கை என்பது பல்லின சமூகங்களையும், கலாசாரத்தையும் கொண்டதொரு நாடு இந்த வித்தியாசங்களை நாம் மதிக்க வேண்டும். இங்கு அனைவரும் சமமானவர்கள் என்பதன் அடிப்படையில் செயற்பட்டு ஐக்கியமானதும் சுபிட்சமானதுமான நாட்டை உருவாக்க வேண்டும். அனைத்து விடயங்களிலும் எதிர்கால சந்ததியினருக்கு சம சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். நாட்டின் ஐக்கியத்துக்கும், சுபிட்சத்துக்காகவும் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

## 'சமூகங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த நாம் பாடுபட வேண்டும்'

டிட்டோகுகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிகாரக் கணவரின் விளக்கம்



கணவர் தினமும் இரவில் நித்திரைக்குச் செல்லும்போது ஒரு பெக் விஸ்கியைக் குடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இதை அவர் பல வருடமாகத் தொடருவதைக் கண்ட மனைவி அந்தப் பழக்கத்தில் இருந்து கணவரை விடுவிக்க வேண்டுமென்று விரும்பினார்.

ஒருநாள் இரவு ஒரு கிளாஸில் விஸ்கியையும் இன்னொரு கிளாஸில் தண்ணீரையும் ஊற்றி மேசையில் வைத்த மனைவி கணவரை அழைத்து 'இதைப் பாருங்கள். விஸ்கி கிளாஸிற்குள்ளும் தண்ணீர் கிளாஸுக்குள்ளும் புழுக்களைப் போட்டிருக்கிறேன். விஸ்கிக்குள் விழுந்தது இறந்துவிட்டது. தண்ணீருக்குள் விழுந்தது நெளிந்து வளைந்து விளையாடிக் கொண்டிருக்கிறது' என்று கூறினார்.

அதன்மூலம் எதைச் சொல்ல வருகிறீர் என்று கணவர் கேட்க, விஸ்கி உயிராபத்தானது என்று மனைவி சொன்னார். அதனால், விஸ்கி அருந்துவதை நிறுத்திவிடுங்கள் என்று கணவரிடம் கெஞ்சிக் கேட்டார் மனைவி.

கணவர் சொன்னார் 'உமக்கு உண்மை விளங்கவில்லை. நான் விஸ்கியைத் தொடர்ந்தும் குடிப்பேன். என் வயிற்றில் புழு வராது' என்றார்.

# கனவுகளின் அர்த்தம்



காதலர் தினத்தன்று காலையில் ஒரு பெண் படுக்கையில் இருந்து திடுக்குற்றவளாக எழும்பி கணவரிடம் அன்பு கனிய 'காதலர் தினப் பரிசாக எனக்கு நீங்கள் வைர நெக்லஸ் வாங்கித் தருவதாகக் கனவுகண்டேன் அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்' என்று கேட்டாள்.

'இன்று மாலை நான் அலுவலகத்தில் இருந்து திரும்பிவரும் போது அதைத் தெரிந்துகொள்வாய்' என்று கணவர் பதிலளித்தார்.

மாலை வந்தது கணவரும் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிவந்து மனைவியிடம் ஒரு பார்சலைக் கொடுத்தார்.

பெரும் ஆவலுடன் பார்சலைத் திறந்து பார்த்த போது அதற்குள் ஒரு புத்தகம் இருந்தது. அந்தப் புத்தகத்தின் தலைப்பு 'கனவுகளின் அர்த்தம்' என்பதாகும்.

# 'எனக்கும் தனக்கும் உள்ள வித்தியாசமே தெரியவில்லை'



ஜோன் தனது காதலியை காருக்குள் இருத்திவிட்டு மதுபானசாலைக்குள் சென்று மணித்தியாலக் கணக்காக மது அருந்திக் கொண்டிருந்தார்.

வெளியே கடுமையான குளிர் என்பதால் காதலிக்கு ஏதாவது நடந்திருக்குமோ என்று அஞ்சிய ஜோன் மதுபரிமாறும் பையனைக் கூப்பிட்டு வெளியில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் தனது காரைப் பார்த்துவருமாறு கேட்டார்.

பையனும் வெளியே வந்து கார்க் கண்ணாடிகளூடாகப் பார்த்தான். அங்கே காதலியை ஜோனின் நண்பர்களில் ஒருவரான டேவிட் கட்டியணைத்து முத்தமிட்டுக் கொண்டிருந்தார். பையன் டேவிட்டுக்கு கைலாகு கொடுத்துவிட்டு மதுபானசாலைக்குள் திரும்பிச் சென்று தனது வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

பையன் தனக்கு எந்தத் தகவலையும் சொல்லவில்லையே என்பதால் ஜோன் தானாகவே வெளியே சென்று காருக்குள் எட்டிப் பார்த்துவிட்டு வயிறு குலுங்கச் சிரித்தவாறு உள்ளே வந்தார்.

'அங்கே என்ன நடக்குது' என்று பையன் கேட்க, ஜோனிடமிருந்து வந்தது பதில்;

'டேவிட் மிதமிஞ்சிய போதையில் இருக்கிறார். வெறியில் அவருக்கு எனக்கும் தனக்கும் உள்ள வித்தியாசமே தெரியவில்லை'.

# உண்மையான மாமியார்



மன்னன் சாலமன் முன் விசித்திரமான வழக்கொன்று வந்தது. இரு பெண்கள் இளைஞன் ஒருவனை இழுத்துக் கொண்டுவந்து மன்னர் முன்னிலையில் நிறுத்தினார்கள்.

'இந்த இளைஞன் எனது மகளைத் திருமணம் செய்ய இணங்கியிருக்கிறான்' என்று ஒரு பெண் சொன்னாள் 'இல்லை மன்னா அவன் எனது மகளைத்தான் திருமணம் செய்ய இணங்கியிருந்தான்' என்று இரண்டாவது பெண் மறுத்துக் கூறினாள்.

இரு பெண்களும் பெரும் கூச்சலுடன் அந்த இளைஞனுக்கு உரிமை கோரி வாதாடிக் கொண்டிருந்தார்கள்.

பொறுமையிழந்த மன்னன் சேவகனை அழைத்து பெரிய ஒரு வாள்கொண்டுவா இந்த இளைஞனைச் சரிபாதியாக வெட்டி இரு பெண்களுக்கும் ஒவ்வொரு துண்டைக் கொடுப்போம் என்று பணித்தார்.

ஆகா கடவுள் என்னைக் கைவிடமாட்டார் மன்னன் நல்ல தீர்ப்பல்லவா தரப்போகிறார் என்று முதல் பெண் மகிழ்ச்சியடைந்தாள்.

'மன்னா அந்த இளைஞனை வெட்டித் துண்டாடி உங்கள் சபையை இரத்தக்களரியாக்கவும் வேண்டாம்' அந்த இளைஞனின் உயிரைப் பறிக்கவும் வேண்டாம். அந்தப் பெண்ணிடமே அவனைக் கொடுத்துவிடுங்கள் என்று இரண்டாவது பெண் கண்ணீர்விட்டு கெஞ்சி மன்றாடினாள்.

உடனே மன்னன் சாலமன் இந்த இளைஞன் முதல் பெண்ணின் மகளைத் தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று தீர்ப்பு அளித்தார். அந்தப் பெண் இளைஞனை இரு துண்டுகளாக வெட்டுவதையல்லவா மன்னா விரும்பினாள் அவரின் மகளுக்கு இவனை எப்படி வரனாகக் கொடுப்பது என்று சேவகன் கேட்டான்.

மருமகன் துன்புறுவதைப் பார்க்க விரும்புவள் தான் உண்மையான மாமியார் [illegible] புரியவில்லையே என்றார் மன்னன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுள் குறைக்கும் உணவுகள்

உடலும் மனமும் ஆரோக்கியமாக இருக்க தரமான,சமச்சீரான உணவுகளை உட்கொள்ள வேண்டும்.உடல் ஆரோக்கியத்தில் உணவு,உடற்பயிற்சி,ஓய்வு மற்றும் அமைதியான வாழ்க்கை முறை ஆகியன முக்கிய பங்காற்றுகின்றன.இவற்றில் உணவுக்கு சிறப்பிடம் காணப்பட்டிருந்த போதும் இதில் பலர் அக்கறை செலுத்துவதில்லை.

இன்று பலர் தரக்குறைவான உணவுகள் மீது ஆர்வம் கொள்வதால் தமது உடம்பின் மீது அக்கறை காட்டுவது குறைவாக காணப்படுகின்றது.

இரசாயனப் பொருட்கள் சேர்க்கப்பட்டு வியாபார நோக்கத்தில் உருவாக்கப்படும் உணவுகள்,சுற்றுச்சூழல் மாசடைதல்,மன அழுத்தம்,ஓய்வின்மை போன்றவற்றால் உடலாரோக்கியம் பாதிக்கப்படுகிறது.

விளம்பரங்கள் சொல்லும் கவர்ச்சிகளுக்கு மயங்கி உடலாரோக்கியத்திற்கு அக்கறை காட்டாமல் வெறுமனே நாக்கு ருசிக்காக உணவுகளை உட்கொள்கின்றோம்.வயிறு நிரம்பிவிடும்.ஆனால் உடலுக்குத் தேவையான போஷாக்குகள் கிடைப்பதற்கு பதிலாக நோய்களே பரிசாக கிடைக்கின்றது.

இன்றைய காலத்தில் உயிராபத்தான விடயமாக துப்பாக்கிச் சூடோ குண்டுவீச்சுகளையோ குறிப்பிட முடியாது.தவறான உணவு முறைகளும் தரக்குறைவான உணவுகளுமே காரணம்.இவ்வுணவுகள் மனித உடலினுள் செல்லுமிடத்து 10 வருடத்தில் மரணிக்கப்போகும் ஒருவர் 5 வருடத்தினுள் ஆயுளை முடித்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுமென விஞ்ஞானியொருவர் தெரிவித்துள்ளார்.

சிற்றுண்டிச்சாலைகள்,ஹோட்டல்,ரெஸ்டூரண்டுகளின் கவர்ச்சிகளுக்கு உள்ளீர்க்கப்பட்டு தரமான உணவுகளை வீட்டில் சமைத்து உண்ணுவதில் அக்கறை காட்டுவதில்லை.

'தவறான மருந்தைக் கொடுத்து மரணத்தைக் கொடுக்கும் சில வைத்தியர்களை விட ஆபத்தானவர்கள் தவறான உணவுகளை கொடுப்போரே' என பேராசிரியர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

கடைகளில் உணவுகள் மலிவு விலையில் விற்கப்படுவதால் அதில் பலர் ஆர்வம் காட்டுகின்றனர்.அத்துடன் காலாவதியான உணவுப் பொருட்களும் விற்பனை செய்யப்படுவதுடன்,மிதமிஞ்சிய வகையில் அழகுக்காக செயற்கை பதார்த்தங்கள்,சேர்க்கப்பட்ட உணவுப் பண்டங்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

இவ்வாறான தரக் குறைவான உணவுகளை உட்கொண்டு இவ்வுணவுகள் உடம்பினுள் சமிபாடடையாமல் உடல் கோளாறுகள் ஏற்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச் செல்வதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

கடந்த மாதம் நீர்கொழும்பு ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்தவர்களில் 13 பேர் உணவு நஞ்சாகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதுடன் கெக்கிராவ பாடசாலையொன்றில் 6 மாணவர்களும் குருநாகல் பாடசாலையொன்றில் 13 மாணவர்களும் உணவு விஷமானதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.அதேவேளை கடந்த செவ்வாய்க் கிழமை பதுளைப் பகுதியில் அன்னதானமாக வழங்கப்பட்ட உணவு நஞ்சானதில் 3 வயது சிறுமியொருவர் உயிரிழந்ததுடன்,10 சிறுவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளிலும் கடைகள்,ஹோட்டல்களிலும் போஷாக்குள்ள முறையான உணவுகள் தயாரிக்கப்படல் வேண்டுமெனவும் தரக்குறைவான உணவுகளை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளதுடன், அனைத்துப் பகுதிகளிலும் விசாரணைகளை மேற்கொள்வதற்காக பிரதேச சுகாதார பரிசோதகர் குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

தரமான உணவு தொடர்பாக பல்வேறு திட்டங்களை சுகாதார அமைச்சு நடைமுறைப்படுத்தியுள்ள போதிலும் இதன் அறிவுரைகளை செவிமடுக்காமல் வாங்கும் நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள அதேவேளை, விற்பனை செய்வோரின் எண்ணிக்கையும் பெருகியுள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் உணவு மற்றும் போஷணைக்குப் பொறுப்பான டாக்டர் தீப்த்தி பெரேரா கூறுகையில்;

'இன்று 100 வீதம் தரமான இயற்கை உணவு உட்கொள்பவர்கள் மிகவும் குறுகிய எண்ணிக்கை கொண்டவர்களாகவேயுள்ளனர்.உணவில் ஊட்டச் சத்துகள் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறி வியாபார போட்டிகளுக்காக நுகர்வோரை கவரும் விதத்தில் விற்பனை மேற்கொள்ளப்படுகின்றது. அழகுக்காகவும் சுவைக்காகவும் இரசாயனப் பொருட்கள் சேர்க்கப்பட்டுள்ளதால் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன.

வனிலா கலக்கப்படும் உணவு வகைகளில் பேன்களை கொல்லப்பயன்படுத்தப்படும் 'பைப்ரஹோல்' என்ற இரசாயன பதார்த்தமும் ரின்களில் அடைக்கப்பட்டு பதப்படுத்தப்பட்ட பழ வகைகளில் துணிகளை கழுவப் பயன்படுத்தும் 'எதில் அசிடெட்' 'அமில் அசிடெட்' வெண்ணெய் நீக்கப்பட்ட பால் அடர்த்தியாக இருக்கவேண்டும் என்பதற்காக சில பால் நிறுவனங்கள் கலக்கும் இரசாயனப் பொருட்கள் உள்ளிட்ட பலவகையான இரசாயனப் பொருட்களினால் புற்றுநோய்,தொண்டையில் அரிப்பு, புண், தலைவலி, நெஞ்சில் இறுக்கம் [காஸ்ரிக்] வயிற்றுப்போக்கு, தோல்நோய்கள்,ஒவ்வாமை [அலர்ஜிக்], நீரிழிவு, பெண்களுக்கான கருவில் மூளைப்பாதிப்பு, உடல் உறுப்பு வளர்ச்சி குறைபாடு, ஆஸ்மா, குடற்புண் [அல்சர்] போன்ற பல்வேறு வகையான நோய்கள் ஏற்படுகின்றன.

எனவே தங்களது பணத்தைக் கொடுத்து நோய்களை விலைக்கு வாங்காமல் செயற்கையான உணவுகளை வீட்டில் சமைத்து உண்ணுவதற்கும் இல்லாவிடின் கடைகளில் கொள்வனவு செய்யப்படுகின்ற உணவுகளின் தரங்களை நன்கு பரிசீலனை செய்து வாங்குவதன் மூலமும் எதிர்காலத்தில் ஏற்படுகின்ற நோய்களை இல்லாமல் செய்ய முடியுமென' அவர் கூறினார்.

எனவே உணவு தயாரிப்பவர்கள் அதற்கான கல்வியை பெற்றிருப்பது அவசியமாகவுள்ள அதேவேளை,ஆரோக்கிய உணவு,சுகாதாரம் சரியான முறையில் பேணப்படல், மலிவு விலையிலுள்ள உணவுகளின் தன்மையை அறிந்து நுகர்வோர் கொள்வனவு செய்வதன் மூலம் தமது உடலையும் உயிரையும் பாதுகாத்துக் கொள்ள முடிவதுடன் ஆரோக்கியமாகவும் வாழலாம்.




எச்.ஹுஸ்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயிற்று வலி என்றால் சும்மாவா?

வயிற்று வலியானது ஒவ்வொரு மனிதருக்கும் அவரவர் வாழ் நாளில் என்றோ ஓர் தடவையாவது உணரப்பட்ட ஒருவிடயம் என்றுதான் சொல்ல வேண்டும். எனினும் திடீரென ஏற்படும் உக்கிரமான வயிற்றுநோ அல்லது வயிற்று வலி கருத்திற்கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயமாகவே உள்ளது. இதனூடு ஒரு தொடர் செயற்பாடு மறைக்கப்பட்ட நிலையில் காணப்படலாம். அதாவது வயிற்றுவலியானது ஒரு நோயல்ல. அது ஒரு அறிகுறியே ஆகும்.அதன் மூல காரணம் அல்லது தோற்றுவாயை அறிவதே ஏற்ற சிகிச்சை முறையாகும். இவ்வாறு இல்லாமல் வலியைக் குறைப்பதற்கு வலிநிவாரணிகளைத் தொடர்ந்து பயன்படுத்திக் கொண்டிருப்பதும் ஏற்புடையதல்ல. இதுமிகவும் அருவருக்கத்தக்கதே ஆகும்.



வயிற்று வலியானது பின்வரும் நோய்நிலைகளில் அதிதீவிரமானதாகவும் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்கலாம். குடலில் ஏற்படும் முறுக்கம் அல்லது தடையினால் உடற்குழியில் குருதிப் பெருக்கு ஏற்படின் குடலில் துளை ஏற்படின் உணவுப் பொருட்கள் அல்லது உணவை சமிபாடடையைச் செய்யும் பதார்த்தங்கள் உடற்குழியினுள் செல்வதால் சூலகக் காண்கள் முறுக்கமடைதல் அல்லது வெடித்தல் போன்ற நிலைகளில் சிறுநீர்க் கற்கள், குடல் முறுக்கமடைதல் அல்லது தடைப்படல் என்றும் கருதும் போது குடலிறக்கத்தில் குடலானது நலிந்த உடற்பகுதியூடாக வெளிப்பிதுக்கப்படும். இது சத்திரசிகிச்சையின் போது ஏற்படும் தழும்புகள் தொப்புள், தொடைப்பகுதியில் பூப்பென்பின் மேற்புறமாக ஆண்களில் விதைப்பையினூடாகவும் குடலிறக்கம் ஏற்படலாம்.

இவ்வாறு ஏற்படும் குடலின் வெளித்தள்ளல் பிதுக்கங்கள் போன்று தென்படும். இங்கு சிறிய துவாரத்தினூடாகக் குடலின் பகுதிகள் வெளித்தள்ளப்படுகின்றன. இதனால் துவாரத்தின் விளிம்பைத் தாண்டி உடற்குழியில் காணப்படும் குடல் வெளிப்பிதுக்கப்பட்டு தசையின் இடையில் காணப்படும் இக் குடல் துண்டம் துவாரத்தின் விளிம்பால் இறுக்கப்படும் போது குடலில் காணப்படும் உணவுசார் சமிபாட்டு விளைவுகள் தேக்கமுறுவதற்கு ஏதுவாகும். இதனால் திரட்சியடையும் நிலை ஏற்படுகின்றது. இதனூடு வலி தொடர்கிறது.

இவற்றைவிட சிறுவர்களில் குடல் உள்முகமடிவதால் குடலின் உள்ளிடம் ஒடுக்கமாவதுடன், உணவுசார் சமிபாட்டு பொருட்களின் பயணமும் தடைப்படும். இவற்றைப் போல வயது வந்தவர்களின் குடலானது சுழற்சி முறுக்கத்திற்கு உட்பட்டு அதாவது ஒரு சிறு துண்டை நாம் அதன் சுயாதீன அந்தங்கள் அல்லாத நடுப்பகுதியில் முறுக்கும் போது ஏற்படுவது போன்ற நிகழ்வைக் கருத்திற் கொள்ளலாம். இவ்வாறு குடலில் ஏற்படும் முறுக்கங்களினால் ஒன்றை ஒன்று தொடும் குடலின் பகுதி... அதாவது நசிவுறும் பகுதியில் குருதி விநியோகம் பாதிப்புறுவதால் குடற் கலங்கள் இறக்கின்றன. அத்துடன் உணவு செல்லும்பாதை தடைப்படுவதால் வயிற்றுப் பொருமல், வாந்தி மற்றும் மலம் கழித்தல் பாதிப்புறும். இவற்றினைத் தாண்டி வாயு வெளியேற்றமும் பாதிக்கப்படும்.



குடலில் துளை ஏற்படும்போது... அதாவது குடற்புண் நோயின் தீவிரத்தன்மையில் குடலில் புண் ஆழ ஊடுருவி விடும் போது குடல் குழாய் வடிவில் இருப்பதால் துளை ஏற்படுகின்றது. இத்துளையூடாக உடற்குழியினுள் சமிபாட்டு நொதியங்கள் குடற்சாறு உணவு என்பன சென்றடைகிறது. இதன்போது உடற்குழியில் அழற்சி ஏற்படும். இதனால் வயிற்று வலியானது மிக உக்கிரமான நிலையில் உணரப்படும். இதேபோன்று சதையிச் சுரப்பியில் ஏற்படும் நீர்க்கட்டிகள் உடைவதாலும் நொதியங்கள் பல உடற்குழியில் விடுவிக்கப்படுகின்றது இந்நிலை மதுப்பாவனையாளரில் பெரிதும் ஏற்படுகின்றது.

இவை இவ்வாறிருக்க குடல்வளரியில் ஏற்படும் அழற்சிகுடல்வளரி வெடிப்பதாலும் அத்துளையினூடு நோய்க்கிருமிகள் உணவுப் பொருட்கள், மலம் நொதியங்கள் என்பன உடற்குழியில் விடுவிக்கப்படுவதன் விபரீதங்களைத் தானும் வெளிப்படுத்தத் தவறுவதில்லை. இவ்வாறே சூலகக்காண் வெடித்தலின் போது உடற்குழியினுள் குருதியிழப்பு ஏற்படுகின்றது. இதனால் சுற்றியோட்டப்படும் குருதியளவு குறைவடைவதால் உயிராபத்து ஏற்படுகின்றது. இது பெரிதும் இடம்மாறிய கருத்தல்கலில் கர்ப்பவதிகளில் நிகழ்கின்றது.

இதேபோன்று குடலில் துளை ஏற்படுவது அறிந்ததே. அவ்வாறே இரப்பையிலும் குடற் புண்ணினால் துளை ஏற்படும் சந்தர்ப்பத்தில் மலம் கறுப்பாக வெளியேறுதல் மற்றும் இரத்த வாந்தி இவை தாண்டி இவ்வாறான உக்கிரமான திடீர் வயிற்றுவலியும் உணரத் தவறுவதில்லை... இவ்வாறு உயிராபத்தை விளைவிக்கும் சந்தர்ப்பங்கள் உள்ள நிலையில் தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் மரணத்தை நெருங்கும் தன்மை உள்ளமை உணரப்பட வேண்டும். வயிற்று வலியை அலட்சியம் செய்ய முடியாது. போகின்ற மேற்படி நிலைகள் அறிவதன் மூலம் உயிரிழப்புகளைத் தவிர்க்க முடியும். இவ்வாறான நிலையில் மருத்துவம் மூடுமந்திரம் ஆகவுள்ளதால் வியாபார ரீதியாக மருத்துவம் மாற்றமுறுவதால் சும்மா வயிற்று வலிகூட 3 குளிச்ண செய்யப்பட்டு பணம் கறக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

**டாக்டர் வெ.நாகநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணி காட்டிய நிலவு



நிலவில் தண்ணீர் இருக்க வாய்ப்பே இல்லை என்று புதிய ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

நிலவில் தண்ணீர் இருக்கலாம்.நிலவின் உட் பகுதியில் அது பனிக்கட்டியாக உறைந்திருக்கலாம் என்றெல்லாம் சமீபகாலமாக கூறப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நியூமெக்சிகோ பல்கலைக் கழகத்தின் கோளியல் பிரிவின் பேராசிரியர் ஷகாரி ஷார்ப் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் குழு நடத்தியுள்ள ஆய்வு இந்த நம்பிக்கையை முழுவதுமாக சிதைத்துள்ளது.

நிலவில் இருந்து கொண்டுவரப்பட்ட பாறைகளில் உள்ள குளோரினின் அளவை ஆய்வுசெய்த இந்தக் குழுவினர் அங்கு தண்ணீர் இருக்கவே வாய்ப்பில்லை என்பதை கண்டறிந்துள்ளனர்.

இது குறித்து சயின்ஸ் இதழில் இந்த ஆராய்ச்சியாளர்கள் எழுதியுள்ள கட்டுரையில்;

நிலவின் பாறைகளில் ஏராளமான குளோரின் ஐசோடோப்புகள் உள்ளன. பூமியில் உள்ள பாறைகளில் உள்ளதை விட நிலவின் பாறைகளில் குளோரின் 25 மடங்கு அதிகமாக உள்ளது.

நிலவில் ஹைட்ரஜன் இல்லாததே இந்த அளவுக்கு குளோரின் படிமம் உள்ளதற்குக் காரணம்.ஹைட்ரஜன் இருந்திருந்தால் இந்த குளோரின் அணுக்கள் அதனுடன் இணைந்த ஹைட்ரஜன் குளோரைட் போன்ற கூட்டுத் தனிமங்கள் உருவாகியிருக்கும்.

ஆனால், ஹைட்ரஜன் இல்லாததால்தான் நிலவில் குளோரின் தனித்த நிலையில் உள்ளது.

நிலா சுமார் 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் உருவானபோதே அதில் போதுமான ஹைட்ரஜன் இல்லை.இதனால் அங்கு உயிர்கள் உருவாகும் அளவுக்கு நீர் இருக்கவே வாய்ப்பில்லை என்று கூறப்பட்டுள்ளது.

ஐசோடோப் என்றால்... ஒரே இரசாயனத்தின் வெவ்வேறு நியூட்ரான் எண்ணிக்கை கொண்ட அணுக்கள் தான் ஐசோடோப்.உதாரணத்துக்கு கார்பன்-12 ஐசோடோப், கார்பன்-13 ஐசோடோப் இதில் கார்பன்-12 இல் உள்ளது. 6 நியூட்ரன்கள்,கார்பன்-13 இல் உள்ளது 7 நியூடன்கள் அவ்வளவு தான்.

# பச்சை குத்தினால் எயிட்ஸ் வரும்

அதிகம் 'டாட்டூ' [பச்சை] குத்திக் கொள்பவர்களுக்கு மஞ்சள் காமாலை, எயிட்ஸ் வரும் அபாயம் அதிகம் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.



தென் பசிபிக் பெருங்கடலில் உள்ள சமோவா தீவு பழங்குடியினர் பயன்படுத்திய வார்த்தை 'டட்டாவ'. இதையும் ஆங்கிலேயர்கள் தங்களுக்கு வசதியாக உச்சரித்து 'டாட்டூ' என ஆக்கியதில் உலகம் முழுவதும் நாகரிகமாகிவிட்டது.

முன்பெல்லாம் மணிக்கட்டு ஏரியா, தோளில் கட்சித் தலைவர் பெயர், கட்சிக் கொடி, காதலி பெயரை பச்சை குத்திக் கொண்டனர். ஊரோரம் புளிய மரத்தடியில் உட்கார்ந்து பத்து ரூபாய்க்கு குல சாமி, மனதுக்குப் பிடித்த மங்காத்தா, ஆத்தா அப்பன் வச்ச பெயர்னு கிராமத்துக்காரர்கள் பச்சை குத்திக் கொண்டனர். அப்போது அதன் விபரீதம் உணரப்படவில்லை. இப்போது விழித்துக்கொண்டு கிராமத்துக்காரர்கள் பச்சையை மறந்துவிட்டனர்.

ஆனால், பச்சை அப்படியே டாட்டூவாகி மேல்தட்டு நாகரிக நகரவாசிகளை ஓட்டி உறவாடுகிறது. கூச்ச நாச்சமேயில்லாமல் பின்பக்க இடுப்பை இழுத்து



விரித்துக்காட்டி டாட்டூ போட்டுக் கொள்ளும் இளம் பெண்கள் இங்கும் அதிகரித்து வருகின்றனர். உள்ளாடைகளில் மறையும் இடங்களைக் கூட அவர்கள் விட்டு வைப்பதில்லை. அதிகளவில் டாட்டூ குத்துவது ஆபத்து என்று தற்போது தெரியவந்துள்ளது.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் இதுதொடர்பாக ஒரு ஆய்வு. அமெரிக்கா, ஈரான், இத்தாலி, பிரேஸில் உள்பட 30 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட 124 ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சியாளர்கள் ஒரு அறிக்கை தயார் செய்துள்ளனர். அதில் கூறியிருப்பதாவது;

டாட்டூ போடும் போது தோல் ஒரு வினாடிக்கு 80 முதல் 150 முறை பஞ்சர் செய்யப்படுகிறது. மேலும் இரத்தம் உள்ளிட்ட உடல் திரவங்கள் மீது இக்கருவியின் ஊசி முனை படுகிறது. கருவியை முறையாக ஸ்டெரிலைஸ் செய்யாமல் பலருக்கும் பயன்படுத்தினால் கிருமிகள் பரவி நோய் ஏற்படும். டாட்டூவில் பயன்படுத்தப்படும் நிறமிகளும் பெரும்பாலும் சுகாதாரமாகப் பராமரிக்கப்படுவதில்லை. நோய்களைப் பரப்புவதில் இவற்றுக்கு முக்கிய பங்கு உண்டு.

டாட்டூ அகற்றும்போதும் நோய் பரவ வாய்ப்பு உள்ளது. டாட்டூ அகற்ற தெர்மல் இன் ஜ ரி, டெர்மப்ரேஷன், க்ரயோ தெரபி போன்ற முறைகள் பின்பற்றப்படுகின்றன. இதிலும் அதிக கவனம், பாதுகாப்பு அவசியம். சுத்திகரிக்கப்படாத கருவிகளைப் பயன்படுத்தினால் எச்.ஐ.வி., எயிட்ஸ், ஹெபடைடிஸ் பற்றீறியா, பூஞ்சை தொற்றுகள் வரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்கம் பக்கம்

## தவறான பயன்பாடு ஆபத்தில் முடியும்

இன்றைய சமுதாயத்தில் மக்கள் தொகையை விட செல்போன்கவின் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. ஒரு சராசரி மனிதனின் வருமானத்தை விட, அவன் செல்போனுக்குச் செய்யும் செலவு அதிகமாக இருக்கிறது. 2006 ஆம் ஆண்டின் கணக்குப்படி உலக அளவில் செல்போன் விற்பனையில் இந்தியா இரண்டாம் இடத்தில் இருக்கிறது என கணக்கெடுப்புத் தெரிவிக்கிறது.

இன்றைய இளையோர் ஒரு நாளில் பாதி நாளை செல்போனோடு தான் கழிக்கிறார்கள். இவ்வாறாகத் தொடர்ந்து செல்போனிலேயே பேசிக்கொண்டிருப்பதால் இவர்களுக்கும் இவர்களுடைய பெற்றோர்களுக்கும் நண்பர்களுக்கும் சகோதர, சகோதரிகளுக்கும் இடையேயுள்ள உறவுகள் பாதிக்கப்படுகின்றன. மனிதர்களையும் இயற்கையையும் அன்பு செய்ய வேண்டியவர்கள் மனிதர்களைப் பயன்படுத்தித் தூக்கி எறிந்துவிட்டு, பயன்படுத்தி தூக்கி எறியப்படும் செல்போன்களை அன்பு செய்கின்றனர். தொழில்நுட்பம் நமக்கு அன்ன பாத்திரமாகக் கொடுத்த செல்போன்களை இளையோர் பிச்சைப் பாத்திரமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். செல்போன்களைப் பயன்படுத்தி அறிவையும் வாய்ப்புகளையும் பெருக்கிக் கொள்ள வேண்டியவர்கள் செல்போன்களால் தங்களுடைய இளமையையும் வாழ்க்கையையும் அழித்துக் கொள்கின்றனர்.

சென்ற ஆண்டு நான் தமிழ்நாட்டில் இருந்தபோது செங்கல்பட்டு நெடுஞ்சாலையில் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த ஒரு இளைஞனுடைய செல்போனுக்கு எங்கிருந்தோ யாரிடமிருந்தோ ஒரு அழைப்பு வந்தது. வாகனம் ஓட்டிக் கொண்டிருந்தவன் தன் சட்டைப்பையில் இருந்த செல்போனை எடுத்து இதோ வந்துகொண்டிருக்கிறேன் என்று பதில் சொல்லி முடிப்பதற்குள் அவனுக்கு பின்புறமிருந்து வந்த அரசுப் பேருந்து அவன் மீது மோதியதில் அந்த இடத்திலேயே அவன் பிணமானான். அந்த விபத்தைப் பார்த்த எனக்குப் பெரும் அதிர்ச்சி. அவனுடைய அஜாக்கிரதையினாலும் செல்போன் மீது அவனுக்கிருந்த ஈடுபாட்டினாலும் வாழ வேண்டிய வயதில் சாதிக்க வேண்டிய பருவத்தில் தன்னுடைய வாழ்க்கையை அவன் தானே அழித்துக் கொண்டான். அவனுடைய செல்போன் அவன் சாக வழிவகுத்தது.

செய்தித் தாளில் நாம் அனைவரும் படித்த செய்தி இது. ஒரு தனியார் நிறுவனத்தில் மூன்று நண்பர்கள் ஒன்று சேர்ந்து அதே நிறுவனத்தில் பணிபுரியும் வேறொரு இளைஞனிடம் செல்போன் மூலமாக ஒரு அழகிய பெண் பேசுவது போல கவர்ச்சியாகப் பேசி மயக்கி ஒரு தனிமையான இடத்திற்கு அவனை வரவழைத்து அந்த இளைஞனைக் கொன்று குப்பைத் தொட்டியில் வீசியிருக்கிறார்கள். செல்போனில் உள்ள (MAGIC VOICE OPTION) மூலம் பேசியவர் ஆணா, பெண்ணா என்று கூடப் புரிந்துகொள்ளாமல் செல்போனில் அழைத்தவள் ஒரு பெண்தான் என்று நம்பி இவ்வாறாக ஒரு இளைஞன் செல்போனுக்கு தங்களைத் தியாகம் செய்திருக்கிறான்.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் 'நிஜம்' நிகழ்ச்சியில் பார்த்த ஒரு செய்தி இது. ஒரு இளைஞனுடைய செல்போனுக்கு மிஸ்கோல் ஒன்று வருகிறது. அந்த எண்ணிற்கு அந்த இளைஞன் தொடர்பு கொள்கிறான். அந்த எண்ணில் அழகிய பெண் குரல் ஒன்று கேட்கிறது. இது ஒரு அழகிய இளம் பெண்ணின் குரல் என்று நினைத்துப் பலமுறை இவன் செல்போனில் அந்த பெண்ணோடு பேசுகிறான். நாளடைவில் இருவருக்கும் செல்போனில் உறவு மலருகின்றது. ஒரு நாள் அந்த இளைஞன் அந்தப் பெண்ணை நேரில் சந்திக்க ஆசைப்படுகின்றான். நேரில் அந்தப் பெண்ணைப் பார்க்கும் போது முதிர் கன்னியாகவும் அசிங்கமானவளாகவும் இருக்கிறாள். அவனுடைய எதிர்பார்ப்புக்கு எதிர்மாறானவளாகவும் இருக்கிறாள். அவளைப் பார்த்தவுடன் அவன் அதிர்ந்து விடுகிறான். ஆனால், அப்பெண்ணோ அவனைத் திருமணம் செய்யும்படி கட்டாயப்படுத்துகின்றாள். அவளுடைய விடாப்பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள அவளைக் கொன்றுவிட்டுத் தப்பித்து ஓடிவிடுகிறான்.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் 'பூதக்கண்ணாடி' நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகிய மற்றொரு நிகழ்ச்சி வந்தவாசி அருகில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் ஒரு மாணவனும் மாணவியும் ஒருவருக்கொருவர் நெருக்கமாகக் காதலிக்கின்றனர். ஒருவருக்கொருவர் அன்பையும் பாசத்தையும் கல்லூரியிலேயே நேரம் கிடைக்கும் போதெல்லாம் பரிமாறிக் கொண்டு வந்துள்ளனர். ஒரு நாள் அந்த மாணவன், அந்த மாணவியை ஒரு தனிமையான இடத்திற்குக் வருமாறு அழைக்கின்றான். அவளும் அவனை நம்பி செல்லுகிறாள். இருவரும் உல்லாசமாக இருப்பதற்கு முன்பு அங்கு அருகில் இருந்த கழி[illegible] அந்த மாணவிக்கு தெரியாமல் [illegible] கமராவைப் பொருத்திவிட்டு அவளுடைய ஆடைகளைக் களையச் சொல்கிறான். அவளும் அவனை நம்பி தன்னுடைய ஆடைகளைக் களைந்து அவனோடு உல்லாசமாக இருந்திருக்கிறாள். இதையெல்லாம் தன்னுடைய செல்போனில் படம் பிடித்து அவளுக்கும் அவளுடைய நண்பர்களுக்கும் செல்போன் மூலமாக அனுப்பி இருக்கிறான். இறுதியில் இருவரும் தற்கொலை செய்து கொண்டதாக ஒளிபரப்பு முடிகிறது.

செல்போன்கள் தீமையானவை. தீயவை என்று நான் சொல்லமாட்டேன். செல்போன்கள் மனிதனின் வியத்தகு கண்டுபிடிப்பு. முற்காலத்தில் அரசர்களும் ஞானிகளும் அனுபவிக்காத ஒரு மாபெரும் அதிசயத்தை இக்காலத்தில் பாமரர்களும் ஏழைகளும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று எல்லோர் கையிலும் செல்போன் என்ற நிலை உருவாகிவிட்டது. தகவல் தொழில்நுட்பத் துறையில் செல்போன் கண்டுபிடிப்பு ஒரு மாபெரும் திருப்பமாக இருக்கிறது. இன்று செல்போன்கள் உலக தூரத்தைக் குறைத்து நம் அனைவரையும் தகவல் தொழில்நுட்ப வலைப் பின்னலில் இணைத்திருக்கிறது. இன்று இந்த செல்போனின் உதவியுடன் நாம் உலகில் உள்ள அனைவரோடும் தொடர்பு கொள்ள முடியும் என்ற நிலையையும் இந்த செல்போன்கள் உருவாக்கியுள்ளன. செல்போன் கண்டுபிடிப்பு இவ்வுலகிற்கு ஒரு மாபெரும் வரப்பிரசாதம் என்பதை எவரும் மறுக்க முடியாது. செல்போன் கண்டுபிடிப்பினால் செல்போனின் உபயோகத்தால் இச்சமுதாயத்திற்கு ஆபத்து ஒன்றும் இல்லை. ஆனால், செல்போனின் தவறான பயன்பாட்டினால்தான் மனித சமுதாயத்திற்கு அதிக ஆபத்துகள். குறிப்பாகத் தவறான செல்போன் உபயோகம் இளையோரை அதிகமாகப் பாதிக்கிறது.

செல்போன்களைப் பற்றி இளையோராகிய நாம் கருத்தில் கொள்ளவேண்டியவை.

எவையெல்லாம் நம்மை நல்வழிக்கு அழைத்துச் செல்கிறதோ அவைகளை நாம் பயன்படுத்த வேண்டும். எவையெல்லாம் நம்மை அழிவின் பாதைக்கு அழைத்துச் செல்கிறதோ அவைகளை நாம் தூக்கி எறிய வேண்டும்.

நாம் பயன்படுத்துகின்ற அனைத்திலும் ஒரு சில மதிப்பீடுகளையும் நற்பண்புகளையும் பயன்படுத்த வேண்டும்.

மனிதர்களையும் இயற்கையையும் நாம் நேசிக்க வேண்டும். ஆனால், பொருட்களை நேசித்து மனிதர்களை சமயத்திற்கேற்றாற் போல் பயன்படுத்தக்கூடாது.

செல்போன்கள் செய்தியை அனுப்பவும் செய்தியைப் பரிமாறிக் கொள்ளவும் கண்டுபிடிக்கப்பட்டது. ஊர்க்கதை பேசவும் கடலை போடவும் அல்ல.

செல்போன்களை அதிக நேரம் பயன்படுத்தும்போது அதன் நுண்ணலைகள் மூளையையும் இதயத்தையும் சிறு நரம்புகளையும் பாதிக்கிறது. கான்சர் போன்ற நோய்களை உண்டாக்குகிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அதிக நேரம் பலருடன் நாம் செல்போன்களில் பேசும் போது அதிக மன உளைச்சலுக்கு ஆளாகித் தனிமைப் படுத்தப்படுகின்றோம். வாகனங்கள் ஓட்டுகின்றபோது செல்போன்களைப் பயன்படுத்துவதால் அதிக விபத்துகள் ஏற்படுகின்றன.

செல்போன்களின் தவறான பயன்பாட்டினால் குற்றங்கள் அதிகமாகப் பெருகுகின்றன.

படிக்கின்ற வயதில் அதிக நேரத்தை செல்போனில் செலவிடுவதால் மன உளைச்சல் , காதல், கருச்சிதைவும், பாலுணர்வுகள், கால விரயம் போன்றவைகள் ஏற்படுகின்றன.

செல்போன்களை அதிக நேரம் பயன்படுத்துவதினால் குடும்ப உறவிலும் காதல் உறவிலும் குடும்பத்திலும் சந்தேகங்கள் ஏற்பட்டு உறவுகளில் விரிசல்கள் ஏற்படுகின்றன.

உலகில் உள்ள எல்லா கண்டுபிடிப்புகளும் மக்களின் துன்பத்தைப் போக்கவும் மக்களின் வாழ்க்கையை உயர்த்தவும் தான் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஆனால், நாம் அந்தக் கண்டுபிடிப்புகளையும் தவறாகப் பயன்படுத்தி நம் வாழ்வை நாமே அழித்துக் கொள்கிறோம்.

நம்முடைய வயது அறியாத வயதாக இருந்தாலும் கூட வாழ்க்கையை அறிந்துகொள்வோம். புரிந்துகொள்வோம். செல்போன்களை நல்லவைகளுக்குப் பயன்படுத்தி தீமைகளை தவிர்ப்போம். இளையோரை காப்பாற்றுவோம். இளையோரை செல்லாய் அரிக்கும் செல்போன்களை நன்மையான விடயங்களுக்குப் பயன்படுத்துவோம். ஏனென்றால் இளைஞர்களாகிய எங்களுக்கு அறியாத வயது, புரியாத வயது, எனவே எங்கள் எண்ணத்தை நல்ல பாதையிலே செலுத்துவோம். போன்கள் அவசர உலகத்திலே ஆபத்து வேளைகளிலே கைகொடுத்து உதவும் செல்போன்கள்.எங்களுடைய தவறான பயன்பாட்டால் எம்மையும் ஆபத்தில் சிக்க வைத்து எமது விதியையும் மாற்றிவிடுகிறது.

ஆர்.எஸ்.அலோசியஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கு சௌராஷ்டிரர்களின் பங்களிப்பு

கே.ஆர்.கிருஷ்ணமாச்சாரி

இலக்கியப் படைப்பாளர்கள் தங்கள் தாய்மொழியில் இலக்கியம் படைப்பது ஒரு சாதாரண விடயமாகக் கருதப்படும்.தங்கள் தாய்மொழியல்லாத வேற்றுமொழியில் இலக்கியம் படைத்திருப்பது சிறப்பானதாகப் போற்றப்படும்.மேலும் இவ்வாறு செய்வது அந்த மொழிகளுக்கிடையே இலக்கிய பரிமாற்றம் ஏற்படவும் அந்த இருமொழி பேசுவோரிடையே நல்லுறவு ஏற்படவும் வழிவகுக்கும்.தங்கள் தாய்மொழியல்லாத ஒரு மொழியில் இலக்கியத்தைச் சுவைத்து மகிழும் இலக்கியவாதிகள் அம்மொழியில் இலக்கியம் படைக்கவும் ஆற்றல் பெற்றுவிடுகின்றனர்.

தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத பிற இந்திய மொழியினர்,வெளிநாட்டினர் என்று பற்பலர் தமிழில் இலக்கியப் படைப்பை நல்கியுள்ளனர். அந்த வகையில் மொழி சிறுபான்மையினரான சௌராஷ்டிர மொழியினரும் தமிழ் இலக்கியத்துக்கு சிறிய பங்களிப்பைச் செய்துள்ளனர்.ஆம்! அவர்களின் பங்களிப்பு மிகச் சிறியதுதான். ஆனால் பெரிதும் போற்றத்தக்கது.

சில நூற்றாண்டுகளாகத் தமிழகத்தைத் தங்கள் தாயகமாகக்கொண்டு வாழ்ந்துவரும் சௌராஷ்டிரர்கள் தமிழ் இலக்கியத்துக்குத் தங்களது பங்களிப்பைத் தொடங்கி ஒரு நூற்றாண்டு ஆகிவிட்டது. சௌராஷ்டிரா வரலாற்றை எழுதிய பெரும் எழுத்தாளர் கே.ஆர். சேதுராமன் தமது. நமனை வென்ற நாயகி, என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார்.

தமிழுக்கு அந்தஸ்து இல்லாத அடிமைத்தனமாக வாழ்க்கையை மக்கள் நடத்திய காலத்தில் 1887 இல் சென்னையில் மதுரையின் ஜோதி ஸ்ரீமந் நடனகோபால நாயகி சுவாமிகள் (1843-1914) தமது தமிழ்ப் பாடல்களை தமிழுணர்வுடன் சென்னை பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பரிசீலித்து அச்சிட்டாரென்றால் அவருடைய தமிழ்ப் பற்றைப் எப்படிப் புகழ்வது.ஆதலால் தமிழ் இலக்கியத்தில் சௌராஷ்டிரர்களின் பங்கு துவங்கி நூற்றாண்டுகாலம் ஆகிவிட்டது. நாயகி சுவாமிகள் சௌராஷ்டிர மகாகவி.இவர் தமிழில் நாமாவளிகள் கீர்த்தனைகள் பாடியுள்ளார். இவரைத் தொடர்ந்து கோவிந்ததாசர், விட்டலதாசர்,தொ.ரா.பத்மநாபய்யர், கொண்டிய பாகவதர் உள்ளிட்ட பலர் தமிழ் பக்தி இலக்கியத்துக்கு தங்களது பங்களிப்பை நல்கியுள்ளனர்.

இனிமை, பழமை,எழில் யாவும் கொண்ட தனிமொழி தண்டமிழே என தமிழ் ஆண்டுகள் அறுபதை தமது சிந்தனையில் கண்டு தமிழை அறுபது அடிகளில் 15 வெண்பாக்கள் கொண்டு போற்றிப்பாடிய 'கீதா அஷ்டாவதானி' தொ.ரா.பத்மநாபய்யர்(1899-1963) தமிழ்த் தொண்டு விரிவானது கீதையின் 700 வடமொழி சுலோகங்களை தமிழில் 700 வெண்பாக்களாகப் பாடியுள்ளார். இது தவிர திருவள்ளுவர் நாடகம், வேந்தன் துறவு,தேசிய கீதங்கள் முதலான இவரது இலக்கியப்படைப்புகள் குறிப்பிடத்தக்கவை. இவரது தமிழ்ப்பணி குறித்து பெருமிதம் அடைந்த குன்றக்குடி பெரிய பெருமாள் இவரைப் பற்றிய கட்டுரை ஒன்றில் இவரை வித்தகப் பெரும்புலவர் என்றே குறிப்பிடுகிறார்.

கீர்த்தனைகள் படைத்ததன் மூலம் ஸ்ரீநாயகி சுவாமிகள் தமிழ் இசைக்கு தன் பங்களிப்பைப் பெரிதும் நல்கியுள்ளார். இன்று ஏழிசை வேந்தர் என்று புகழப்படும் டாக்டர் டி.எம். சௌந்தராஜன் என்றும் நிலைத்திருக்கும் முருகன் பாடல்களை தமிழில் பாடியுள்ளதை நாம் அனைவரும் அறிவோம்.தமிழ்த் திரை இசையில் இவர் ஒரு சகாப்தம். இவர் பாடிய திரை இசைப் பாடல்கள் காலத்தால் அழியாதவை.தமிழ்த் தாய் வாழ்த்தை முதன் முதலில் பாடியது இவரே. தமிழ்த்திரை இசையில் ஏ.எல்.ராகவன் பங்கும் பாராட்டத்தக்கது.

மதுரையில் 1901 இல் பாண்டித்துரைத்தேவர் தொடங்கிய நான்காம் தமிழ்ச்சங்கத்தின் நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் பங்கு கொண்டு தமிழ் வளர்ச்சியில் பெரிதும் ஈடுபட்டவர்.மதுரை நகராட்சித் தலைவராக விளங்கிய ராஷ்டிர பந்து எல்.கே. துளசிராம். 1928 இல் சட்டசபையில் தீரர் சத்திமூர்த்தியுடன் பிரிட்டிஷ் அரசால் தடைவிதிக்கப்பட்ட பாரதியார் பாடல்களைத் தமிழ்ப்பற்றுடன் உரத்த குரலில் பாடினார். தமிழ்ச் சான்றோர்கள் மறைமலையடிகள்,வி.க. சுத்தானந்த பாரதி,பி.ஸ்ரீ.ஆசார்யா இவரது நண்பர்கள்.தமது 90 வயதில் அருளிச் செயல் மாலை (திவ்யப் பிரபந்தம்) நூலைப் பதிப்பித்தார். இவரது தமிழ்த் தொண்டைப் பாராட்டி சேதுபதி தங்கப் பதக்கம் இவருக்கு வழங்கப்பட்டது.

## இலக்கிய சுவை...

எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக சாகித்ய அகாதெமி விருது பெற்ற மணிக்கொடி எழுத்தாளர் எம்.வி. வெங்கட்ராமின் தமிழ் இலக்கியப்பணி மகத்தானது. ஆக 1887 இல் நாயகி சுவாமிகள் தொடங்கிய சௌராஷ்டிரர்களின் தமிழ் இலக்கியப் பணி பரிணாம வளர்ச்சியில் வெங்கட்ராம் மூலம் சாகித்ய அகாதெமி விருது பெறும் வரை வளர்ந்திருக்கிறது.

இன்று தமிழ்த் தொண்டு புரிந்து வருபவர்களில் குறிப்பிடத்தக்கவர் டாக்டர் இரா.மோகன் தமிழில் 50 க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.நாயகி சுவாமிகளின் புகழைப் பரப்பும் பணியில் கட்டுரைகள் நூல்கள் எழுதிவரும் இக்கட்டுரை ஆசிரியர் கே.ஆர். கிருஷ்ணமாச்சாரி 'சொல்லின் செல்வர் தா.கு.சுப்பிரமணியன் சௌராஷ்டிர சாகித்ய உரையாசிரியர்களான வித்வான் கே.ராமநாதன் நாயகி சுவாமிகள் பாடல்களைத் தமிழில் பெயர்த்த அமரர் ஆர்.வி.சுந்தர்ராவ் கவிஞர் தாடா, சுப்பிரமணியன்,தமிழ்க் கவிதை பயிற்சி வகுப்பு நடத்தும் கவிஞர் சுப்பு விசுவநாதன் முதலிய இன்னும் பலரின் பங்கு உள்ளது. தமிழிலிருந்து திருக்குறளையும் பாரதியார் பாடல்களையும் மொழிபெயர்த்த வகையில் முறையே கவிஞர் சங்கு ராம் சுந்தர பாரதி இவர்களது பணி பாராட்டுக்குரியது. சௌராஷ்டிர திருக்குறளை உலகளாவிய அளவில் பதிப்பித்த மதுரை சித்தாச்ரம ஆசார்யர் பூஜ்ய ஸ்ரீசித்தநரஹரி குருஜி போற்றுதலுக்குரியவர்.

நூற்றாண்டு காலமாக சௌராஷ்டிரர்கள் தமிழ்த் தொண்டு புரிந்துவரினும் வெளியுலகம் அறியவில்லை. இத்தனைக்கும் மேலாக தங்கள் குருகுலமாக விளங்கும் சௌராஷ்டிர ஆழ்வார் ஸ்ரீமந் நடனகோபால நாயகி சுவாமிகளின் வடமொழி அஷ்டோத்திரத்திற்கு இணையாக தமிழில் 108 போற்றிகளை உருவாக்கி அவற்றைச் சொல்லி வழிபடுகிறார்கள் என்றால் இம்மக்களின் தமிழ்ப் பற்றைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் அருங்காட்சியகம்

நமக்கு ஏதாவது அழகான பொருட்கள் கிடைத்தால் அதைக் கொண்டு போய் நம் வீட்டு வரவேற்பறையில் வைத்து அழகு பார்ப்போம். இதைப் போல் அரசாங்கத்துக் கிடைக்கக் கூடிய கலைப்பொருட்களைப் பாதுகாக்கும் இடம் தான் அருங்காட்சியகம்.

முதல் அருட்காட்சியகம் கி.மு.3 ஆம் நூற்றாண்டில் எகிப்தில் தொடங்கப் பட்டது. 'அலெக்சாண்ட்ரியா அருட் காட்சியகம் என அழைக்கப்பட்ட அங்கு, அறிவுக்கு விருந்து படைக்கும் வகையில் ஏராளமான சேகரிப்புகள் வைக்கப்பட்டிருந்தன. சிலைகள், வானவியல் மற்றும் மருத்துவத்துறை உபகரணங்கள், யானைத்தந்தம், விலங்குகளின் கொம்புகள் போன்றவை அங்கு சேகரித்து வைக்கப்பட்டன.

பின்னர் ஏராளமான அருங்காட்சியகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், 19 ஆம் நூற்றாண்டு வரை அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் பொருட்கள் மட்டுமே அங்கு வைக்கப்பட்டதாலும் அவற்றைப் பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதி கிடைக்காததாலும் அருங்காட்சியகங்களைப் பற்றிய விழிப்புணர்வு மக்களுக்குத் தோன்றவில்லை. பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின்னர் தான் அருங்காட்சியங்களுக்குள் மக்கள் அனுமதிக்கப்பட்டனர்.

19 ஆம் நூற்றாண்டில் தான் அருங்காட்சியகங்களுக்கு என தனி கட்டடங்கள் வடிவமைக்கப்பட்டன. அதுவரை ஏற்கனவே இருந்த கட்டிடங்களிலேயே அருங்காட்சியகங்கள் செயல்பட்டு வந்தன. அப்படி வடிவமைத்துக் கட்டப்பட்ட கட்டிடம் ஜேர்மனி நாட்டில் உள்ள 'பெர்லின்' நகரில் உள்ளது. இது 1830 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

## குறுக்கெழுத்துப்போட்டி - 47

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ☀ | 4 | ☀ |
| 5 | ☀ | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | ☀ | 13 | ☀ |
| ☀ | 14 | 15 | 16 | ☀ | 17 |
| 18 | 19 | ☀ | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | ☀ | 27 |

**இடமிருந்து வலம்**

1. இலங்கைத் தமிழர் அதிகளவில் அகதிகளாகவுள்ள நாடு
6. கொடைவள்ளல் என்று பெயரெடுத்தவர்
10. விபரம் என்றும் சொல்லலாம் (திரும்பியுள்ளது)
14. பாரம் (குழம்பியுள்ளது)
18. பழம் என்றும் சொல்லலாம் (திரும்பியுள்ளது)
20. பெயர் (திரும்பியுள்ளது)
23. அக்கறை என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. சொப்பனம்
3. நீர் நிரம்பிய பெரிய தொட்டி (குழம்பியுள்ளது)
4. இது என்றால் பிணமும் வாய் திறக்கும் என்பர்
11. கிராமத்து நடனம் ஒன்று (குழம்பியுள்ளது)
16. இவற்றை அழிப்பதனால் மழை வீழ்ச்சி குறைகிறது (குழம்பியுள்ளது)
17. கொடிய விஷம் கொண்ட அரவம் (குழம்பியுள்ளது)
18. மாதங்களில் ஒன்று (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப்போட்டி - 45 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. விதுரன் | 1. விடலை |
| 7. கோடி | 3. கரடி |
| 10. கவலை | 4. கோன் |
| 13. தாடி | 5. வட்டி |
| 16. வரி | 11. வருடம் |
| 18. மடல் | 13. தாவணி |
| 21. காணி | 18. மது |
| 23. தும்பு | 20. புல் |
| | 22. சகா |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**திருமதி ஜெயா ஜேகுதாசன்,**
**இல. 155/07, ஜெம்பட்டா வீதி,**
**கொழும்பு-13.**

### பாராட்டுப்பெறுவோர்

01. த.கேசவன்,
இல. 303, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
02. கே.அழசேஸ்வரன்,
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
03. எம்.ஏ.எஸ்.நஸ்லீமா,
புவக்கொட்டுவ, ஹேகுட,
பதுளை.
04. ஏ.செபஸ்தியன்,
இல. 24/2, உடுப்பிட்டிய,
உக்குவளை.
05. ஏ.உதுமா லெவ்வை,
இல. 17, வேகந்தை ஜும் ஆ மஸ்ஜித்
மாவத்தை, கொழும்பு-02.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு–15
என்னும் முகவரிக்கும் அனுப்புங்கள்...

பெயர் : ..............................................

முகவரி : ..............................................

..............................................




## மின்மினியின் காதல்

மின்மினிகள் தங்கள் இணையைக் கவர்வதற்காகத்தான் மின்னுகின்றன. ஆண் மின்மினிக்கும் பெண் மின்மினிக்கும் இந்த வெளிச்சம் உண்டு. பெண் மின்மினிப் பூச்சியின் வெளிச்சம் ஆண் மின்மினியின் வெளிச்சத்தை விட குறைந்த நேரம் ஒளிரக் கூடியதாக இருக்கும். மின்மினியின் வயிற்றுப் பகுதியின் பின்புறத்திலிருந்துதான் வெளிச்சம் வருகிறது. அதன் உடலினுள்ள 'லூசிபெரோஸ், லூஸிபெரின்" எனும் இரசாயனப் பொருட்களின் செயற்பாட்டால்தான் வெளிச்சம் உண்டாகிறது. இந்த செயற்பாட்டிற்கு நிறைய ஒட்சிசன் தேவைப்படும். இது வெளிச்சம் மட்டும்தான். சற்றும் வெப்பமாக இருக்காது. மின்மினிகளில் பல இனங்கள் இருக்கின்றன. ஒளிர்வதற்கும் அணைவதற்கும் இடையிலான இடைவெளி ஒவ்வொரு இனத்திற்கும் வேறுபடும். ஒரு மின்மினி தன் இனத்தைச் சேர்ந்ததா இல்லையா என்று இன்னொரு மின்மினி இந்த ஒளிர்ந்தணையும் இடைவெளியை வைத்துத் தான் கண்டுபிடிக்கிறது.


## முள்ளம் பன்றியின் வீரம்

எதிரிகளிடமிருந்து தற்காத்துக் கொள்வதற்காகத் தான் முள்ளம் பன்றிக்கு முட்கள் அமைந்துள்ளன. எதிரிகள் தாக்க வரும்போது முள்ளம்பன்றி முட்களையெல்லாம் நிமிர்த்திக் கொண்டு விறைப்புடன் நிற்கும். சில சமயம் முட்களை சரியாகப் பார்க்கும் படி முதுகு காட்டித்தான் நிற்கும். சில சமயம் முட்களை ஒன்றாக மெதுவாக அசைக்கும். இதைப் பார்த்தும் எதிரி பயந்தோடவில்லையென்றால் பின்புறமாகவே விரைந்து வந்து எதிரியின் உடலில் முட்களைச் செருகும். எவ்வளவு சக்தியுள்ள பெரிய மிருகமாக இருந்தாலும் முள்ளம் பன்றியின் முள் குத்தினால் பெரும் சிரமம் தான். முள்ளம் பன்றியால் தாக்கப்பட்ட விலங்கு சில சமயம் இறந்துவிடுவதும் உண்டு. விருப்பப்படி அசைக்க முடிகிற தளர்வான தசைகளில்தான் முட்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இந்தத் தசைகளைத் தளர்த்தியும் இறுக்கியும் முட்களைப் படிய வைக்கவோ உதிர்க்கவோ முள்ளம்பன்றிகளால் முடியும்.

முள்ளம் பன்றியால் குத்துப்பட்ட மிருகத்தின் உடலில் தைத்த முள்ளின் முனைகள் சிறிய கொக்கிகளைப் போல நிமிர்ந்து மடங்கி உட்சென்று கொண்டிருக்கும். எதிரிகளிடமிருந்து ஓடியோ, ஒளிந்தோ தப்பிக்க இயலாதவை முள்ளம் பன்றிகள். அதனால்தான் இயற்கை முட்களின் பாதுகாப்பை இவற்றிற்கு வழங்கியுள்ளது. முட்களற்ற பகுதி முள்ளம் பன்றியின் வயிறுதான். இது உடலில் மிகவும் மென்மையான பகுதி. எதிரிகள் இந்தப் பகுதியை பற்றிவிட்டால் முள்ளம் பன்றி வசமாகச் சிக்கிக்கொண்டுவிடும். எதிரிகளைக் கண்டால் சில சமயம் இவை உடலைச் சுருட்டிக் கொண்டு பந்து போலக் கிடக்கும். இந்த நிலையில் முட்களற்ற பகுதி வெளியே தெரியாது. அவுஸ்திரேலியாவைத் தவிர மற்ற எல்லா பகுதிகளிலும் முள்ளம் பன்றிகள் வசிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தனும் நம்குலப் பெண்களும்



எண்சாண் உடம்பிற் சிறந்திருக்கும் சென்னி போன்று பண்பாட்டு விழுமியத்தில் உயர்ந்திருந்த யாழ்ப்பாணம் இன்று எல்லாமே மங்கியும் மறைந்தும் போய் 'பூஜ்யம்' என்ற நிலையிலிருப்பதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக, பெண்கள் விடயத்தில், 'எங்கே செல்கின்றது யாழ்ப்பாணம்?' என்றே எண்ணத் தோன்றுகின்றது.

உலகில் ஒவ்வொரு இனத்திற்குமெனத் தனித்தன்மை வாய்ந்ததும் விழுமியம் தோய்ந்ததுமான 'அடையாளங்கள்' இருக்கின்றன. இதன் மூலமே அந்தந்த இனக்குழுமங்கள் பெருமையுற்றும் அடையாளப்படுத்தப்பட்டும் வாழ்ந்து வருகின்றன.

உலகிலே தன் மொழியால் அடையாளப்படுத்தப்படுகின்ற ஒரேயினமாகத் தமிழினம் இருக்கின்றது. ஆனால், அந்த இனம் தன் கண்ணிலே தானே மண்தூவுவது போன்று படிப்படியாகத் தன் அடையாளங்களை இழந்து வருகின்றது. இந்நிலைக்கு வித்திடுபவர்களாக இருப்பவர்கள் பெண்களே!

தமிழ்ப் பெண்குலமானது ஒரு காலகட்டத்திலே பண்பாட்டு விழுமியங்களில் வானவிற் பரந்தும் கோபுரமாக உயர்ந்தும் தனக்கேயுரிய பெருமையுடன் வாழ்ந்தது. குலமாதர் ஒளிவிசும் முகங்கள் என்று இலக்கியங்களில் பேசவைத்தது. இன்றோ நாகரிக மோகத்தில் இடறுண்டு செல்லும் பெண்களைக் கண்ணொருகையில் ''கண்ணருகே வருவது பெண்தானா?'' என்று சிந்திக்க வைக்குமளவிற்குப் பெண்குலம் எங்கோ சென்றுகொண்டிருக்கின்றது.



யாழ் நகரில் 'எல்லாமே' மாறிக் கொண்டு வருகின்றன. மலர்கள் மணம் வீசிய இடங்களில் முற்கள் முளைத்துள்ளன; பாவலர் கவிபாடிய தேசத்தில் பாஷைகள் புதிதாய்ப் பேசப்படுகின்றன. பட்டுச்சேலைகள் சரசரக்க நடைபயின்ற தெருக்களில் நீச்சல் உடைகள் வலம் வருகின்றன... இப்படி எல்லாமே மாறி விட்டன!

யாழ்நகரில் அன்றாடம் நிரம்பி வழியும் தென்னிலங்கைப் பயணிகளாலும் வெளிநாட்டவர் மற்றும் புலம்பெயர் நம்மவர்களாலும் நகரமே ''புதுக்களை'' கட்டுகின்றது. இதில் வேடிக்கை யாதெனில்; ''மயிலைப் பார்த்து ஆடிய வான்கோழி'' போன்று மேற்படி நபர்களைப் பார்த்து ''நம்மவர்'' நடிக்கும் நாடகங்கள் ஓராயிரம். இதில் ஆண்களும் விலக்கல்ல!

தமிழழகை அழித்து வீதிகளில் பவனி வரும் எம்குலப் பெண்களை நோக்கின்; ''செந்தமிழ் நாட்டுத் தமிழச்சியே; சேலை உடுத்தத் தயங்கிறியே; நெசவு செய்யும் தமிழ்நாட்டில் நீச்சல் உடையில் அலையிறியே'' என்ற சினிமாப்பாடல்தான் ஞாபகத்திற்கு வருகின்றது.

நாள்தோறும் ''திருக்கூத்துகள்'' யாழ்.குடாநாட்டில் அரங்கேறிவரும் அதே வேளை, வரலாற்றுப் பிரசித்தம் வாய்ந்ததும் - தமிழர்தம் பண்பாடு தோய்ந்ததுமான நல்லைக் குமரன் ஆலய தரிசனத்திற்காக வருகை தந்துகொண்டிருக்கும் பக்திப் பிளம்புகள் தம் ஆடையலங்காரங்கள் முருகனையே ''அச்சம்'' கொள்ளச் செய்வன போன்று அமைந்திருப்பதைக் காண முடிகின்றது.

தமிழ்ப் பெண்கள் தமது கலாசாரத்தைப் பாதுகாப்பவர்களாக; தமது இனத்திற்குப் பெருமை சேர்ப்பவர்களாக இருக்க வேண்டும் எனவும் நல்லூர்க் கந்தனின் தரிசனத்திற்காக வருகின்ற அனைத்து மக்களும் இந்துப் பண்பாட்டு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனவும் மாநகர முதல்வர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அந்த ரீதியில்; பெண்கள் சேலை மற்றும் முழுப்பாவாடை சட்டை அணிந்தும் ஆண்கள் வேட்டி, சால்வை அணிந்தும் ஆலயத்திற்கு வரும் அதேவேளை தங்க ஆபரணங்களை அளவுக்கதிகமாக அணிந்து வருவதைத் தவிர்க்குமாறும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதுமட்டுமல்ல; ஆலய தரிசனத்திற்காக வருகின்ற சகல இன, மத, மொழி மக்களையும் இந்துக்கலாசாரப் பண்பாடு வழிமுறைகளைப் பின்பற்றி வருமாறும் கேட்டிருந்தார். ஆனால், இவை யாவும் இன்று ''விவாதம்'' செய்வதற்குரிய ஒன்றாக மாறியிருப்பதும் சுட்டத்தக்கது.

பெண்கள் நாட்டின் கண்கள் என்றும், குடும்ப விளக்குகள் என்றும் சொல்லப்பட்டு வரும் அதேவேளை, இத்தகு பெண்களே இன்று 'புண்கள்' என்று சொல்லப்படும் நிலைக்கு ஆளாகி வருவதும் நம் பாரம்பரியத்தின் நிலைப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

சமகாலப் பெண்களின் போக்குகள் குறித்து ஒரு பெண்ணிடம் கேட்டவேளை, ''ஆள்பாதி, ஆடைபாதி என்பார்கள், ஆனால் இன்றைய இளம் பெண்கள் ஆள் முக்கால், ஆடை கால் எனும் வண்ணம் ஜன்னல்களும் கதவுகளும் வைத்தே ஆடையணிகின்றனர். இது ஆண்கள் பக்கத்தில், அவர்களையும் அறியாமல் தப்பான எண்ணங்களை உதயம் கொள்ள வைக்கும் அதேநேரம், அவர்களின் வாழ்க்கையையே புதைகுழிக்குள் இட்டுச் செல்வதாயும் அமைகின்றது'' என்று கூறினார்.

இதேவிடயம் இன்னொரு பெண்ணிடமும் கேட்கப்பட்டவேளை; ''சில பெண்களைப் பார்க்கின்ற பொழுது நாங்களே வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலையிருப்பது வேதனையளிக்கின்றது. புலம்பெயர் தமிழ்க் குழந்தைகள் தான் எம் பண்பாட்டைப் பின்பற்ற முடியாது வாழ்கின்றன எனில். எமது நாட்டில் எமது பிள்ளைகளும் அதனைப் பின்பற்றாது வாழக்கூடிய துர்ப்பாக்கிய நிலை உருவாக இளம் பெண்கள் காரணமாக இருக்கின்றனர்'' என்றார்.

தமிழ்ப் பெண்குலம் தனது தனித்துவ அடையாளத்தால் மேற்கத்தைய பெண்களுக்கே பாடமாயிருந்த ஒரு காலமும் இருந்தது. அத்துடன், இன்னும் சில இனங்களுக்கே தன் மாதிரிகளைப் பின்பற்ற வைத்தது. ஆனால்,....இன்று வார்த்தைகளில் வடிக்க முடியாதளவிற்கு வழிதவறிச் செல்கின்றது.

பெண்களின் ஆடை விடயத்தில் மாநகர முதல்வரின் அறிவுறுத்தல் பாராட்டத்தக்கது. எனினும் பெரும்பாலான யுவதிகள் ''சந்தைக்கே'' செல்ல முடியாத உடையுடன் ஆலயதரிசனம் மேற்கொள்ள வருவது விசனிக்கத்தக்கது.

எனவே, மங்கிச் செல்லும் எமது பண்பாட்டை மறைந்து செல்ல விடாது காக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்! இவ்விடயம் நல்லூர் ஆலயத்திற்கு மட்டுமல்ல, பெண்கள் வாழ்கின்ற ஒவ்வோர் ஆலயத்திற்கும் அழுத்திச் சொல்லப்பட வேண்டும்! கலாசார விழுமியங்களைப் பேணுவோர் அதிக அக்கறை காட்டின் எம்குலப் பெண்கள் என்றும் ஒளி வீசுவர்!

**எஸ்.ரூபனா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் துரோணர் ரஜினி – சின்னி ஜெயந்த்



சூப்பர் ஸ்டார் ரஜினி தான் என்னுடைய துரோணர். அவர் மூலம் தான் 24 ஆண்டுகளுக்கு முன்பு சினிமாவில் அறிமுகமானேன் என்றார் சின்னி ஜெயந்த். ரஜினி நடித்த கைகொடுக்கும் கை படத்தில் அறிமுகமானவர் சின்னி ஜெயந்த். அதன் பிறகு 412 படங்களில் நடித்துள்ளார். தற்போது நீயே என் காதலி என்ற படத்தைத் தயாரித்து இயக்கி வருகிறார். இது தொடர்பான செய்தியாளர் சந்திப்பில் சின்னி ஜெயந்த் கூறியதாவது;

ரஜினி என்னும் துரோணர் மூலம் சினிமாவுக்கு அறிமுகமானேன். அவரது குரலை மிமிக்கிறி செய்ததற்கே ரசிகர்கள் அத்தனை ஆதரவு கொடுத்தார்கள். இப்போதும் அவரது அன்பு எனக்குண்டு. சின்னப்புள்ள, கானல் நீர் போன்ற படங்களை இயக்கியுள்ளேன். நான்கைந்து படங்களைத் தயாரித்துள்ளேன். இப்போது மீண்டும் நீயே என் காதலி என்ற படத்தைத் தயாரித்து இயக்குகிறேன். உதயா என்ற புதுமுகத்தை அறிமுகம் செய்கிறேன். இந்தப் படத்தில் நாயகியைத் தேடி பெரிய வேட்டையே நடத்தினேன். ஒரு வழியாக டில்லியில் ஒரு பொண்ணு நடிக்கத் தயாராயிருந்தது. நல்லா தமிழ் பேசும்னு வேற சொன்னாங்க. சொன்னா நம்ப மாட்டீங்க... என் படம் ரொம்ப சின்னப் படம். விமானத்திற்கு டிக்கெட் போட்டுத் தரமாட்டேன். நீங்க ரயிலில் தான் வந்து போகனும்னு சொன்னேன். இது வரைக்கும் இந்தப்படத்திற்காக மூணு தடவை ரயிலில் வந்து போனது அந்தப் பொண்ணு. இப்படிப்பட்ட நடிகைகளை நாம தான் முன்னேற்றி விட வேண்டும். இந்தப் படத்தின் பாடல் வெளியீட்டிற்கு ரஜினி சாரைத்தான் அழைக்க நினைத்தேன். ஆனால், இப்போது அவர் இருக்கும் பரபரப்பில் தொந்தரவு செய்ய வேண்டாமே என்று தான் சூர்யா, முருகதாஸை வைத்துப் பாடலை வெளியிட்டேன் என்றார் சின்னி.



Saturday சினிமா

# இது தமிழா...?

படங்களுக்கு தமிழில் பெயர் வைத்தால் வரிச் சலுகை என்று அறிவித்த பிறகு நல்ல தமிழ்ப் பெயர்களைக் காண முடிகிறது. ஒரே பிரச்சினை எது தமிழ் என்று புரியாமல் பெயர்களைக் குழப்புவதுதான். புஷ்கர்–காயத்ரி தங்களது படத்துக்கு குவார்ட்டர் கட்டிங் எனப் பெயர் வைத்தனர். இது ஆங்கிலப் பெயர். அதனால், வேறு தூய தமிழ்ப் பெயரைத் தேடி வருகிறார்கள். சபாஷ் சரியான போட்டி என்ற பெயரில் ஒரு படம் தயாராகி வருகிறது. ஜெயராம் நாயகனாக நடிக்கும் இந்தப் படத்தை வேணுபிரசாத் இயக்குகிறார். நடிகராக இருக்கும் ஒருவரை அவரது உறவினர்கள் முதலமைச்சராக ஆக்கும்படி தூண்டிவிடுவதுதான் கதை. படத்தின் பெயரில் இருக்கும் சபாஷ் தமிழ் கிடையாது. இதனால் இந்தப் பெயர் மாற்றப்படுவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. பெயர் வைப்பதற்கு முன்பு அது தமிழ்ப் பெயர் தானா என்பதை உறுதி செய்ய ஒரு குழு அமைத்தால் நல்லது.

# பிரகாஷ்ராஜுக்கு திருமணம்



மனைவி லலிதா குமாரியை விவாகரத்துச் செய்துவிட்ட பிரகாஷ்ராஜ் எதிர்வரும் 24 ஆம் திகதி நடன இயக்குநர் போனி வர்மாவை இரண்டாவதாக திருமணம் செய்கிறார். மும்பையில் நடக்கும் இந்தத் திருமணத்துக்கு பொலிவுட், தெலுங்கு மற்றும் குறிப்பிட்ட சில தமிழ் சினிமா பிரமுகர்களை அழைத்துள்ளார் பிரகாஷ் ராஜ். இதற்கிடையே அவர் தயாரித்துள்ள இனிது இனிது (ஹேப்பி டேஸ் தெலுங்கு பட ரீமேக்) படத்தை வாங்க ஆளில்லாத சூழ்நிலை உருவானது. இந்தப் படத்தை வெளியிட்ட பிறகே தனது திருமணம் குறித்து அறிவிக்கவிருந்தாராம் பிரகாஷ்ராஜ். ஆனால், படம் வெளியாகுமா என்பதே சிக்கலில் இருந்ததால் என்ன செய்வதென்ற தவிப்பில் இருந்தார். இந்த நேரம் பார்த்து அவருக்குக் கைகொடுத்தார் கல்பாத்தி எஸ் அகோரம். இனிது இனிது படத்தின் முழு திரையரங்க உரிமையையும் கணிசமான விலைக்கு அவர் வாங்கிக் கொண்டார். அந்த சந்தோஷத்தில் இப்போது தனது திருமணத் திகதியை பிரகாஷ்ராஜ் அறிவித்துள்ளார். பிரகாஷ் ராஜுக்கு கல்பாத்தி அகோரம் தந்துள்ள திருமணப் பரிசு இது என்பதே கோடம்பாக்கத்தில் பேச்சாக இருக்கிறது.

# படு வேகத்தில் பாலா



பாலாவின் அவன் இவன் மீண்டும் வேகம் பிடித்துள்ளது. வேகம் என்றால் விடுமுறை தினங்களிலும் வேலை செய்யும் அளவுக்கு படுவேகம். அவன் இவனில் விஷால், ஆர்யா நடிக்கின்றனர். நாயகி ஜனனி ஐயர், விஷால் இந்தப் படத்தில் திருநங்கையாக நடிப்பதாக செய்திகள் கூறுகின்றன. அவன் இவனுக்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார். படத்தில் ரீமிக்ஸ் பாடல்கள் இடம்பெறுவதாகவும் இளையராஜாவிடம் ரீமிக்ஸ் பாடலுக்கு இசையமைக்க கேட்க முடியாது என்பதால் யுவனைப் பயன்படுத்துவதாகவும் பாலா கூறியுள்ளார். கடந்த ஞாயிறன்று ஒரு பாடல் ஒலிப்பதிவானது. இந்தப் பாடலைப் பாடியவர் விஜய் பிரகாஷ். ஞாயிறு சுதந்திர தினம், விடுமுறை என்பது குறிப்பிடத்தக்கது.

# ரவுத்திரம் ஆரம்பம்



சூப்பர்குட் பிலிம்ஸ் தயாரிப்பில் ஜீவா நடிக்கும் படம் ரவுத்திரம். சிக்கு புக்கு படத்தை முடித்திருக்கும் ஸ்ரேயாவுக்கு கைவசம் இருக்கும் ஒரே தமிழ்ப்படம். இந்தப் படம் கைவிடப்பட்டதாக முன்பு செய்திகள் வெளியாயின. இது மற்ற யாரையும் விட ஸ்ரேயாவை ரொம்பவே பாதித்தது. காரணம் இது மட்டும்தான் அவருக்கிருந்த ஒரே வாய்ப்பு. இந்நிலையில் கோ, சிங்கம் புலி படங்களில் ...க்குக்கொண்ட ரவுத்திரம் படத்தின் முதல் படப்பிடிப்பில் ஜீவா கலந்துகொண்டார். இந்தப் படத்தில் பிஸியாக இருந்ததால் ஸ்ரேயா முதல் கட்ட படப்பிடிப்பில் கலந்துகொள்ளவில்லை. இரண்டாம் கட்ட படப்பிடிப்பு விரைவில் தொடங்குகிறது. இதில் கலந்துகொள்ளவிருப்பதாக ஸ்ரேயா தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் இடத்தில் எந்திரன் பாடல்கள்



தமிழ், தெலுங்கு , இந்தி என இந்திய திரையுலகையே கலக்கிக் கொண்டிருக்கின்றன சூப்பர் ஸ்டார் ரஜினி நடிக்க ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ள எந்திரன் படத்தின் பாடல்கள். தமிழ் டொப் 10 பாடல்களில் முதல் நான்கு இடங்களை எந்திரன் பாடல்களே பிடித்துள்ளன. மியூசிக் வேர்ன் டொப் 10 இல் கிளிமாஞ்சாரே... பாடல் தொடர்ந்து இரு வாரங்களாக முதல் இடத்தில் உள்ளது. அரிமா அரிமா பாடல் இரண்டாவது இடத்திலும் காதல் அணுக்கள் மூன்றாம் இடத்திலும் இரும்பிலே ஒரு இதயம்... பாடல் நான்காம் இடத்திலும் உள்ளன. மிர்ச்சி டொப் 10 இல் கிளிமாஞ்சரோ முதல் இடத்திலும் மற்ற மூன்று பாடல்கள் நான்காவது , ஐந்தாவது மற்றும் ஆறாவது இடங்களிலும் உள்ளன.



# கரை கடந்த கஸ்தூரி

காதோரம் வெள்ளைக்கொடி பறந்தாலும் கண் முழுக்க காதலை தேக்கிக் கொண்டு திரியும் அநேக ஐம்பதுகளை நாம் அன்றாடம் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். தனது வயதே வெளியே தெரியாமல் இன்னமும் கவர்ச்சி ஆட்டத்தில் களேபரம் செய்யும் கஸ்தூரியையும் இந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான் திஸ் இஸ் ஃபிரம் கஸ்தூரி என்ற அறிமுகத்துடன் வருகிற இ மெயிலில் வைரஸ் வந்தாலும் பொறுத்துக்கொள்ளலாம். திரையுலக பிரபலங்கள் பலருக்கும் அதில் வருவது கஸ்தூரியின் கன்னாபின்னா படங்கள்தான். அப்படியிருந்தும் வெங்கட் பிரபு மாதிரியான இயக்குநர்களை தவிர வேறு யாரும் அவரது கவர்ச்சியை சகித்துக்கொள்வதில்லை. இந்தக் குளம் வத்தினா என்ன? அசலூர் குளத்தில் கெண்டை மீனாவது பிடிப்பேன் என்று தூண்டிலோடு கிளம்பியிருக்கிறார் கஸ்தூரி. இவரது முயற்சிக்கு அங்கேயும் கை கொடுத்திருப்பது ஒரு தமிழ்ப்பட இயக்குநர்தான். பாலசந்தர்-பாரதிராஜாவை வைத்து ரெட்டச்சுழி படத்தை இயக்கிய தாமிரா கன்னடத்தில் ஒரு படத்தை இயக்கப் போகிறார். அதில் முக்கிய வேடத்தில் நடிக்கவிருப்பது கஸ்தூரியேதானாம்.

# அனன்யாவின் கேள்வி



நாடோடிகள் படத்தின் மூலம் தமிழ் சினிமா ரசிகர்களுக்கு அறிமுகமானவர் நடிகை அனன்யா. அந்தப் படத்தைத் தொடர்ந்து தமிழில் சீடன் படத்தில் நடித்து வரும் அவர், மலையாளத்தில் மோகன்லால் அமிதாப் இணையும் கந்தஹார், மோகன்லால் நடிக்கும் சிக்கார் ஆகிய படங்களில் நடித்து வருகிறார். தமிழில் சீடனைத் தொடர்ந்து இயக்குநர் வசந்தபாலனின் உதவியாளர் இயக்கவுள்ள படமொன்றில் நடிக்கவிருப்பதாகக் கூறும் அனன்யாவிடம் கவர்ச்சியாக நடிப்பீர்களா? என்று கேட்டால் கொதித்து எழுந்து விடுகிறார். அவர் கூறுகையில்;

இயல்பான கதைகளுக்கு நாயகியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சினிமாவுக்கு வந்தேன். கவர்ச்சியில் நடிப்பேன். ஆனால், அதற்கான எல்லையை விட்டுத் தாண்ட மாட்டேன். நிறையப்பேர் சொல்லுவார்கள். அதெல்லாம் பொய். கவர்ச்சி என வந்த பின் அதென்ன எல்லை? எல்லையென்றால் அது எது வரைக்கும் எனச் சொல்லச் சொல்லுங்கள் பார்க்கலாம் என்று கவர்ச்சி பற்றி வெட்டிப்பேச்சு பேசும் நாயகிகளுக்கு கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் அவர் கூறுகையில்; நடிகையின் நடிப்பைப் பார்க்கத்தான் ரசிகனுக்கு ஆர்வம் இருக்க வேண்டும். உடம்பைப் பார்க்க வேண்டும் என்று ரசிகர்கள் திரையரங்கம் வந்தால் நமக்கு கவர்ச்சியில் மட்டும்தான் ஆர்வம் இருக்கிறது எனத் தெரிந்துவிடும். இன்னும் சொல்லப்போனால் எனக்கு சரியாக வராது. அதற்கேற்ற உடல்வாகு எனக்கில்லை. பக்கத்து வீட்டு பெண் மாதிரியான உணர்வைத்தான் என்னிடம் எதிர்பார்க்கிறார்கள். அதனால், இயல்பான கதைக்கு எப்போதுமே நான் நாயகி-அவ்வளவுதான் என்கிறார்.



சிக்கு புக்கு—ஆர்யா, ஸ்ரேயா



எந்திரன்—ரஜினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இன்டர்நெட்டில் ஒரு வீடு

நமக்கென்று ஒரு வீடு இருப்பது எவ்வளவு அவசியம், அத்தியாவசியமாகி விட்டதோ அதே போல இணையவெளியில் நமக்கென்று ஒரு வெப்சைட் இருப்பதும் கூட அவசர அவசியமாகி வருகிறது.

முன்பு இன்டர்நெட் என்பது ஒரு தகவல் தொடர்புக்கான விஷயமாக இருந்து வந்தது. ஆனால் இன்று அது ஒரு மீடியம் என்ற அளவுக்கு வளர்ந்து விட்டது.

ஒவ்வொருவரின் தனி வாழ்க்கையிலும் இன்டர்நெட் இன்று முக்கிய பங்கு வகிக்கிறது. டீ சாப்பிடுவது, காப்பி சாப்பிடுவது போல் சாதாரணமாக இருந்து வந்த இன்டர்நெட் இன்று சாப்பாட்டுக்கு இணையான முக்கியத்துவத்துடன் வளர்ந்து நிற்கிறது.

தனிப்பட்ட சமூக, அரசியல், பொருளாதார கற்பனைத் திறன் என பல நிலைகளிலும் இன்று இன்டர்நெட் தவிர்க்க முடியாத ஒரு முக்கிய அம்சம். அனைவரையும் உள்ளடக்கக் கூடிய ஒரே மீடியம் இணையத்தளம் மட்டுமே.

ஒவ்வொருவரும் இன்று வெப்சைட்களை உருவாக்கிக் கொள்வதில் ஆர்வம் காட்ட ஆரம்பித்துள்ளனர். முன்பு இமெயில் ஐடி மட்டும் இருந்தால் கௌரவமாகக் கருதப்பட்டது. இப்போது நமது இணையத்தளத்தின் பெயரையும் விசிட்டிங் கார்டில் சேர்ப்பது கூடுதல் கௌரவமாக மாறியுள்ளது.

எப்படி ஒரு இமெயில் ஐடியை உருவாக்குவது சுலபமோ அதேபோல இன்று வெப்சைட்டை உருவாக்குவதும் கூட மிக எளிதாகியுள்ளது. ஏன் நமக்கென்று ஒரு வெப்சைட் தேவைப்படுகிறது என்பதற்கான காரணங்களை இங்கு பார்ப்போம்.

**வாடகை வீட்டுக்கு சொந்த வீடு மேல்**

நமக்கென்று ஒரு வெப்சைட்டை உருவாக்குவது என்பது வாடகை வீட்டிலிருந்து சொந்த வீட்டுக்குக் குடி பெயர்வது போலத்தான். இதுவரை பேஸ்புக்கிலும் ட்விட்டர்களிலும் பிளாக்குகளிலும் உங்களை உங்களது திறமைகள் உள்ளிட்டவற்றை வெளிப்படுத்தி வந்த உங்களுக்கு உங்களுக்கே உரித்தான ஒரு இடத்தில் உங்களுக்குச் சொந்தமான இடத்தில் இன்னும் விரிவாக பறைசாற்ற முடியும். அதற்குத் தேவை ஒரு இணையத்தளம்.

இது உங்களது இடம். இங்கு உங்களுக்குக் கூடுதல் சுதந்திரம் உண்டு. உங்கள் மனதில் இருப்பதை அப்படியே இங்கு கொடுக்க முடியும். கூடுதல் சௌகரியங்களோடு.

**சிறந்த சிந்தனைப் பரிமாற்றம்**

உங்களுக்கென்று ஒரு இணையத்தளம் இருந்தால் உங்களது சிந்தனைகள், அனுபவங்களை, அறிவை, ஆர்வத்தை இன்னும் சிறப்பாக பிறருடன் பரிமாறிக் கொள்ள முடியும்.

கலந்துரையாடல் தளத்தை உருவாக்கலாம். இதன் மூலம் பல்வேறு விஷயங்களைப் பலருடன் விவாதிக்க முடியும்.

ஒரு விருந்தினர் புக்கை வைக்கலாம். இதன் மூலம் உங்களது தளங்களுக்கு வருவோரின் எண்ணங்களையும் கருத்துகளையும் அறிந்து உங்களை மேம்படுத்த முடியும். அவர்களுடன் ஆரோக்கியமான விவாதத்திற்கு இது வழிவகுக்கும்.

**குறைந்த முதலீட்டில் நிறைந்த லாபம்**

உங்களுக்காகவே நவீன தொழில் நுட்பங்கள் வாசல் படியில் வந்து காத்துக் கொண்டிருப்பதால் உங்களது இணையத்தளம் மூலம் நீங்கள் பணம் பார்க்கவும் முடியும். உங்களது இணையத் இடம்பெறச் செய்யும் விளம்பரங்கள் (Google Adssnce/Adwords ad solutions) உங்களுக்கு வருவாயைத் தேடித்தரும்.

முழுமையான கற்பனை சுதந்திரம் உங்களது வீட்டை உங்களது விருப்பத்திற்கேற்ப எப்படியெல்லாம் அலங்கரிப்பீர்களோ அதே போல உங்களது இணையத்தளத்தையும் நீங்கள் நினைத்தபடி வடிவமைக்கலாம். அழகுபடுத்தலாம். எழுத்துருக்கள், நிறம், இலச்சினைகள் என அனைத்திலுமே உங்களது கற்பனைத் திறனுக்கு முழுமையான சுதந்திரம் இங்கு உண்டு.




**ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு அழகு**

நமது இணையத்தளங்களுக்கு மெருகூட்டுவது என்பது நமது கையில்தான் உள்ளது. பல பொருட்களில் நாம் நமது பக்கங்களை அழகாக்க முடியும். உங்களது இணையத்தளத்தின் ஒவ்வொரு பக்கத்திற்கும் ஒரு பொருள் கொடுத்து வடிவமையுங்கள். உதாரணத்திற்கு உங்களது ஹோம் பேஜில் உங்களைப் பற்றிய முழுமையான விபரங்களையும் கொடுக்கிறீர்கள் என்றால் பிற பக்கங்களை உங்களது ஒவ்வொரு விருப்பத்திற்கேற்றவாறு வடிவமைக்கலாம்.

பிளாக்கை இணையுங்கள்

பொங்கல் சாப்பிட்டால் கூடவே வடை என்பது போல பிளாக் இல்லாமல் ஒரு இணையத்தளம் முழுமை அடையாது. தேடுதளங்களும் கூட பிளாக்குகள் மீது அதிக பிரியத்துடன் உள்ளன. எனவே ஒரு பிளாக்கை உங்களது இணையத்தளத்தில் இணைத்து கூடுதல் பார்வையாளர்களை ஈர்த்துப் பிடியுங்கள்.

**விரலுக்கேற்ற வீக்கம்**

இது மிகவும் முக்கியம். அதாவது நம்மால் எவ்வளவு செலவழிக்க முடியுமோ அதற்கேற்றால் போல திட்டமிடுவது நீங்கள் உங்களது சொந்த விருப்பதிற்காக வெப்சைட்டை உருவாக்குகிறீர்களோ அல்லது வர்த்தக நோக்குடன் தொடங்குகிறீர்களோ அது உங்களுக்கு அதிக செலவை வைத்து விடாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

சரி வெப்சைட் ஆசை வந்து விட்டதா கவலையேபடாதீர்கள். உங்களுக்கான டொமைன்களை ஆண்டுக்கு சிறுதொகை மட்டுமே செலுத்தி இப்போது நீங்கள் உரிமையாக்கிக் கொள்ள முடியும்.

ஹோஸ்டிங் வசதி, எக்கச்சக்கமான ஜிகாபைட் இட வசதி, ஒரு இலவச இமெயில் கணக்கு, டேட்டா டிரான்ஸ்பர் வசதி இன்னும் இன்னும் பல வசதிகளுடன். பிறகென்ன கூடுதல் சுவாசக் காற்றுடன் இணையவெளியில் சுதந்திரமாக பறக்க ஆரம்பிக்கலாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# மொஹமாதி அஸ்தியானி

ஈரானில் மிகக் கொடூரமான முறையில் நிறைவேற்றப்படும் மரண தண்டனைக்கு உட்படுத்தப்படவுள்ளவர்தான் சகீனா மொஹமாதி அஸ்தியானி. தகாத முறையில் அதாவது கணவர் அல்லாத வேறொருவருடன் உடலுறவு கொண்ட குற்றச்சாட்டுக்காக அஸ்தியானிக்கு கல்லால் அடித்து கொலை செய்யப்பட்டு மரணதண்டனை நிறைவேற்றப்படவுள்ளது.

மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கு ஆரம்பத்தில் தூக்கு மூலம் கொல்லப்படுவதே பரவலான தண்டனையாக இருந்து வந்தது.

ஆனால்,பின்னர் துப்பாக்கியினால் சுடப்படுதல் ,மின்சார நாற்காலி போன்றனவும் மரணதண்டனை நிறைவேற்றும் முறைகளாக இருந்துவந்தன.

ஆனால்,மத்திய கிழக்கு நாடுகள் சில மாற்று வழிகள் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு சில கொடூரமான முறைகளை கையாண்டு வருகின்றன.

சிரச்சேதம்,கல்லால் அடித்துக் கொலை செய்தல் போன்றவை மத்திய கிழக்கு நாடுகளில் பயன்படுத்தப்படும் மரணதண்டனை முறைகளாகும்.

துரித அடிப்படையிலேயே தகாத முறையில் கணவர் அல்லாத ஒருவருடன் உடலுறவு கொண்ட குற்றச்சாட்டுக்காக அஸ்தியானிக்கும் கல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது.

1967 ஆம் ஆண்டு பேசியானில் பிறந்த இவர் தனது உறவினர் ஒருவரை திருமணம் செய்திருந்தார்.சில காலங்கள் கழிந்தபின்னர் கணவர் இறந்துவிட்டார்.

கணவர் இறந்த பின்னரேயே அஸ்தியானி அத்தவறைப் புரிந்ததாக கூறப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டுத் தொடர்பாக அஸ்தியானி தப்றிஸ் நீதிமன்றத்தினால் 2006 மேயில் முதல் தடவையாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

அப்போது அஸ்தியானிக்கு 99 கசையடிகள் வழங்கப்படவேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டு அத்தண்டனை நிறைவேற்றப்பட்டது.

பின்னர் அஸ்தியானியின் கணவரின் மரணம் தொடர்பான வழக்கு 2006 செப்டெம்பரில் விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோதே அஸ்தியானி கல்லால் அடித்துக்கொலை செய்யப்படவேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டது.

அத்துடன் இம்மரண தண்டனை ஆனது 2007 மே 27இல் நிறைவேற்றப்படவேண்டுமென ஈரான் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆனால், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னர் அஸ்தியானிக்கு தண்டனை விலக்களிக்கும் உத்தரவை பிறப்பிப்பதற்கான பொறுப்பு ஈரானின் அதியுயர் மதத் தலைவரான அயொதொல்லா அலி காமனியிடம் மட்டுமே உண்டு.

இந்நிலையில் தமது தாயாரின் மரண தண்டனையை இரத்துச் செய்யக்கோரி அவரது இரு பிள்ளைகளும் பிரசார வன்முறையை மேற்கொண்டிருந்தனர்.

அதற்கு ஆதரவாக லண்டன்,வாஷிங்டன் ஆகிய நாடுகளிலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

மனித உரிமைகள் காப்பகம்,சர்வதேச மன்னிப்புச் சபை ஆகிய உயர் மட்ட மனித உரிமை அமைப்புகளிடமிருந்தும் இம்மரண தண்டனையை நிறுத்துமாறு கோரப்பட்டது.

இதேவேளை,அஸ்தியானி கல்லால் அடித்துக்கொலை செய்யப்படமாட்டாரென பிரிட்டனுக்கான ஈரான் தூதரகம் விடுத்த அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான இவரின் மரண தண்டனை நிறைவேற்றம் குறித்து சர்ச்சைகளும் மர்மங்களும் நிலவும் நிலையில் அஸ்தியானிக்கு புகலிடம் வழங்க பிரேஸில் முன்வந்துள்ளது.

அஸ்தியானியை தமது நாட்டுக்கு அனுப்புமாறு பிரேஸில் ஜனாதிபதி லுலா டி சில்வா ஈரான் ஜனாதிபதியை கோரவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.


பிரேஸிலின் இந்த நடவடிக்கை உண்மையில் பாராட்டப்படவேண்டியது தான்.


அஸ்தியானி செய்த தவறினை நாம் நியாயப்படுத்த முன்வரவில்லை.ஆனால் அவரின் இரு பிள்ளைகளினதும் எதிர்காலத்தினை கருத்திற்கொண்டு ஈரான் உயர் மட்டம் இரக்கம் காட்டினால் அது உலகளவில் ஈரானுக்கு வரவேற்பை ஏற்படுத்தும்.


**யோ.நிமல்ராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிந்துவிட்டதாக கருதப்பட்ட அரியவகை தேவாங்கு 60 ஆண்டுகளின் பின் இலங்கையில் கண்டுபிடிப்பு

பூமியில் இருந்து அழிந்து விட்டதாக விலங்கியல் ஆராய்ச்சியாளர்களால் கருதப்பட்ட ஒரு தேவாங்கு இனம் 60 ஆண்டுகளுக்குப் பின் இலங்கையில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விலங்கியல் குறித்த ஒரு ஆராய்ச்சியின் போது இந்த தேவாங்கு இனம் ஆராய்ச்சியாளர்களின் கண்களில் சிக்கியுள்ளது. உலகம் தோன்றியபோது இருந்த பல விலங்கினங்கள் தற்போது இல்லை.இயற்கையின் சீற்றத்தாலும் எரிகற்கள் மோதியதாலும் பல அரிய விலங்குகள் பூமியில் இருந்து பூண்டோடு அழிந்து விட்டன.டைனோசர்கள் கூட இவ்வாறுதான் அழிந்தன என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.இந்த வகையில் சின்னஞ்சிறு தேவாங்கு இனம் ஒன்று அழிந்து போய் விட்டதாகவே கருதப்பட்டது.லண்டன் விலங்கியல் அமைப்பு,கொழும்பு பல்கலை இலங்கை திறந்த பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து இலங்கை வனங்களில் உள்ள விலங்குகள் குறித்த ஆய்வை சமீபத்தில் மேற்கொண்டன.இந்த ஆய்வின் போதுதான் அழிந்துவிட்டதாக கருதப்பட்ட தேவாங்கு இனம் கிடைத்து உள்ளது.



இதுகுறித்து இலங்கையைச் சேர்ந்த விலங்குகள் குறித்த ஆராய்ச்சியாளர் சமன் கமகே கூறியதாவது;

20 செ.மீ.உயரமும் பளிங்கு போன்ற கண்களும் கொண்ட பாலூரட்டி இனத்தைச் சேர்ந்த இந்த தேவாங்கு இனம் கடந்த 60 ஆண்டுகளுக்கு முன் காணப்பட்டது.அதன் பின் அவை மறைந்து போய்விட்டன.19 ஆம் நூற்றாண்டில் வெள்ளையர்களின் பிடியில் இலங்கை இருந்தபோது கோப்பி,தேயிலை தோட்டங்களை அமைப்பதற்காக காடுகள் அதிகமான அளவில் அழிக்கப்பட்டன.அப்போது இங்கு வாழ்ந்த அரிய வகைப் தேவாங்கு எதிரிகளிடம் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காக இடம் பெயர்ந்தன.கடந்த 1937 முதல் 2002 ஆம் ஆண்டு வரை பார்க்கவில்லை.இதனால் இந்த இனம் அழிந்து போயிருக்கலாம் என்று கருதப்பட்டது.

இந்நிலையில் கடந்த 2002 ஆம் ஆண்டு ஒரு சிலர் இந்த இனத்தைப் பார்த்தாக கூறினர்.இதைத் தொடர்ந்து இந்த அரிய விலங்கினம் குறித்த தேடுதல் துவக்கப்பட்டது.எவ்வளவோ முயன்றும் கடந்த 2002 முதல் 2009 ஆம் ஆண்டு வரை இந்த விலங்கினம் குறித்த எவ்வித தடயமும் கிடைக்கவில்லை.இந்நிலையில் சமீபத்தில் இந்த விலங்கினம் ஆராய்ச்சியாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.இவ்வாறு சமன் கமகே தெரிவித்தார்.

இந்த விலங்கின் ஆய்வில் முக்கிய பங்கு வகித்த லண்டன் விலங்கியல் அமைப்பின் விலங்கியல் ஆராய்ச்சியாளர் டர்னர் கூறுகையில்; 'இந்த தேவாங்கு இனத்தின் ஸ்பெஷாலிடியே அதன் ஒளிமிளிரும் சிவப்பு நிற கண்கள்தான். இதை கொண்டே நாங்கள் இந்த விலங்கை அடையாளம் கண்டோம்.தற்போது ஆய்விற்காக இந்த அரிய வகை தேவாங்கு எங்களிடம் உள்ளது.அதன் எடை, உயரம் உள்ளிட்ட அளவுகள் எடுக்கப்படும்.மரபணுக்கள் குறித்த சோதனை மேற்கொள்ளப்படும். அதன் பின் தேவாங்கு காட்டில் விடப்படும்.

எங்களை பொறுத்தவரையில் இது மிகவும் அதிசயமான ஒரு விலங்கினம்.அழிந்து போயிருக்கலாம் என்று பல ஆண்டுகளாக கருதப்பட்டு வந்த இந்த தேவாங்கு இனம் தற்போது காணப்பட்டுள்ளதால் இலங்கைக் காடுகளில் இவ்வகை விலங்கினம் இருக்க அதிக வாய்ப்பு உண்டு'.




## பிரார்த்தனை செய்தால் நோய் குணமாகுமா...?

நோயாளிக்கு மிக நெருக்கமாக அமர்ந்து பிரார்த்தனை செய்தால் நோய்கள் குணமாகும் என்று ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது. பிரார்த்தனைகளால் நோய்கள் குணமாகுமா என்பது குறித்து மருத்துவர்கள் , மத குருமார்கள், விஞ்ஞானிகள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று அண்மையில் ஆய்வு நடத்தியது.

அதில், நோயாளிக்கு நெருக்கமாகவும் அவரது உடலை தொட்டபடியும் பிரார்த்தனை செய்தால் அந்த நோயாளியின் பிரச்சினைகள் தீரும் என்று ஒரு ஆய்வில் தெரியவந்துள்ளது. இது குறித்து இண்டியானா பல்கலைக்கழக இறையியல் பேராசிரியர் கண்டி பிரவுன் தலைமையில் இந்த ஆய்வு நடந்தது.

மொசாம்பிக் நாட்டில் உள்ள சில கிராமங்களைச் சேர்ந்த பார்வை குறைபாடுகள் உள்ள 11 பேரும் காது கேளாமைக் குறைபாடுகளைக் கொண்டிருந்த 14 பேரும் இந்த ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கிறிஸ்தவ பிரார்த்தனைக் குழுக்கள் அந்த நோயாளிகளுக்காக பிரார்த்தனை செய்தனர். இந்தப் பிரார்த்தனைகளுக்குப் பின்னர் அவர்களை ஆய்வு செய்தபோது அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு உடல் நிலையில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது தெரிய வந்தது. முற்றிலும் காது கேளாமல் இருந்த இரண்டு பேருக்கு 50 டெசிபல் அளவுக்கான ஒலியைக் கேட்கும் திறன் ஏற்பட்டிருந்தது. மேலும், பார்வையின்மையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த 3 பேருக்கு பார்வை தெரிய ஆரம்பித்துள்ளது. இந்த ஆய்வு தொடர்பான விரிவான அறிக்கை அடுத்த மாதத்தில் வெளியாகியுள்ளதாக ஆய்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.



## ஒரே படுக்கை ஆபத்தாம் என்கிறது ஆய்வு

கணவன்-மனைவியர் ஒரே படுக்கையில் ஒன்றாகப் படுத்து தூங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தால் அவர்களது உடல்நலம் பாதிக்கப்படலாம் என்று கூறி அதிர வைக்கிறது ஒரு ஆய்வு.

இது குறித்து இங்கிலாந்தில் நடத்தப்பட்ட ஆய்வில் பரிசோதனைக்கு தம்பதியரில் 50 சதவீதத்துக்கும் அதிகமானனோர் சரியான தூக்கமில்லாமல் அவதிப்பட்டதாகத் தெரிவித்து உள்ளனர்.

இதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்த போது கணவர் அல்லது மனைவியர் தங்களது துணைக்குக் கொடுக்கும் சில தொல்லைகள் தான் என்பதும் அப்போது தெரியவந்தது. அதாவது குறட்டை, பற்களைக் கடித்தல், படுக்கையில் புரள்தல் போன்றவற்றை அவர்கள் தொல்லைகளாகக் குறிப்பிட்டனர்.

இதுபோன்ற தொல்லைகளால் ஆரம்பக் காலங்களில் தூக்கம் கெட்டாலும் நாளடைவில் இதய நோய் போன்றவை தாக்குவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் அந்த ஆய்வு மேலும் தெரிவித்துள்ளது.



அத்துடன் தம்பதியருக்குள் ஒரே ப்டுக்கையறையில் தூக்கம் கெட்டால் அவர்கள் டிவோஸ் வரை போய் விட நிறைய வாய்ப்பு இருக்கிறது என்றும் எச்சரித்தனர் அந்த ஆய்வாளர்கள்.

இந்த ஆய்வு முடிவு திருமணம் ஆகி குழந்தை பெற்ற தம்பதியருக்கு மட்டும் தான் பொருந்தும். மற்ற இளஞ்ஜோடிகள் அல்ல எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பக்கவாதம் தாக்கியவர்களுக்கு மூளையை இயக்கும் மைக்ரோ சிப்ஸ் கண்டுபிடிப்பு

பக்கவாதம் தாக்கியவர்களுக்குக் கை, கால்கள் இழுத்துக் கொள்ளும் மூளை செயற்பாடு பாதிப்பு தான் பக்கவாதம் நோயை ஏற்படுத்துகிறது .மூளை இடும் கட்டளைகள் சரியான முறையில் செயலாற்றாமல் போகும் போது இந்த நோய் ஏற்படும். இப்போது பக்கவாத நோய் பாதித்தவர்களுக்கு மூளையை இயக்கும் மைக்ரோ சிப்பை கனடா நாட்டு விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர்.

கால் சேரி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நவீத் சயீத் தலைமையிலான விஞ்ஞானிகள் குழு இதை உருவாக்கி இருக்கிறது. மைக்ரோ சிப்பை மூளை செல்களோடு பொருத்தி செயற்படாமல் இருக்கும் மூளையை இயக்க செய்கின்றன.

மூளையின் பல்வேறு பாதிப்புகளையும் இதன் மூலம் சரி செய்து விடலாம் என்று விஞ்ஞானிகள் குழு தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Saturday மெயில் சிறுகதை

# இடமாற்றம்

தும்பை நாமகன்

அதிகாலை நான்கு தடவை 'டாண்,டாண்' என முழங்கி ஓய்ந்தது சுவர்க்கடிகாரத்தின் ரீங்கார ஒலி. 'நரக வாழ்க்கை' உள்ளத்தில் ஊறிய வார்த்தைகளை உதட்டுக்கு வழியனுப்ப விரும்பாதவளாக மனதிற்குள்ளேயே உமிழ்ந்து கொண்டாள் ரேகா.

முருகா,யேசுவே,அல்லா என இறை உணர்வுடன் எழுந்திருக்க வேண்டிய காலைப்பொழுதில் நரக வாழ்க்கை என்று சொல்ல வைத்துவிட்டது அவளது விரக்தி நிலை.தன்னைச் சுதாகரித்த வண்ணம் படுக்கையை விட்டு எழுந்தவளின் மனதில் வழமையை விட பத்து நிமிடமாவது முன்பதாக புறப்பட வேண்டும் என்ற சோககானம் இசைத்துக் கொண்டிருந்தது.

இதுவரை காலமும் அண்மையில் வேலை பார்த்த ரேகா குடுகுடு காலத்தில் தூரப்பயணம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை என்று விதியின் மேல் பழி போடமுடியவில்லை ரேகாவால்.

நவீன யுகமாகிய இன்றைய காலத்தில் மாற்றங்கள்,இடமாற்றங்கள் காலத்தின் தேவை.ஆனால் அவை உரிய காலத்தில் உரிய ஒழுங்கு முறையில் பக்கச்சார்பற்ற தன்மையில் சிறுபான்மை பெரும்பான்மை என்ற பாகுபாடினைக் கடந்து செய்யவேண்டியவைகள்.இவற்றையெல்லாம் கடந்துவிட்டது இரண்டாயிரத்துப் பத்து ஆசிரிய இடமாற்றம்.

பென்சனுக்கு எழுதலாம் என்றால் பொருளாதாரப் பிரச்சினை அதற்கு இடம் கொடுக்கவில்லை. 'கடவுள் தருவதை வேண்டாம் என்று சொல்லக்கூடாது' என சிரித்து சிரித்து உவகை பொங்க ஏழு சிற்பங்களை வடித்துவிட்டார்கள் ரேகாவும் அவள் கணவன் சித்தார்த்தும்.

'சரி பென்சன் தாங்கோ' என மேலதிகாரிகளை வெருட்டலாம் என்றால், 'பென்சன் தாராளமாய் எடும்' என்று கூறிவிடுவார்கள். பெரும்பான்மை சமூகத்தினர் என்றால், 'ஏன் இதற்கெல்லாம் பென்சன் எடுக்கிறீர்கள்' என்று கரிசனை கொண்டு விரும்பிய பாடசாலையை கொடுத்துவிடுவார்கள்.

படாரென கையில் வைத்திருந்த பாத்திரம் 'டொங்' என்ற நாதத்தில் நிலத்தில் விழ வெட்டிப் பாத்திரத்திலிட்ட காய்கறித்துண்டுகள் நிலத்தில் சிதற, 'என்னப்பா!விடியவே போட்டுடைக்கத் தொடங்கிட்டீரே, இன்றைய பொழுது உருப்பட்டதுபோலத்தான்' கணவன் சித்தார்த்தன் குறை தூக்கத்தில் புலம்ப 'ஐயோ' என்று தலையில் கொட்டிக் கதற வேண்டும் போன்ற உணர்வு.

பதிலுக்குத் தானும் கத்தி வீட்டைத் துண்டாட விரும்பாதவளாக சிதறிய காய்கறித்துண்டுகளை பொறுமையுடன் பொறுக்கி பாத்திரத்திலிட்டுக் கொண்டாளே தவிர அவளது படபடப்பு இன்னும் ஓயவில்லை.

சித்தார்த்தனுக்கு இவையெல்லாம் எங்கே விளங்கப் போகிறது?அவனது தொழில் சுதந்திரமாக ஆடிப் பாடிச் செய்யும் தொழில். நேரமுகாமைத்துவம் என்ற பதம் அவனை எந்த விதத்திலும் பாதிக்கப்போவதில்லை.

ஏதோ ஒருவிதமாக வேலைகளை புறம் தள்ளி பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி கணவனையும் தொழிலுக்கு அனுப்பி 15 நிமிடம் வழமையை விட முன்பதாக புறப்பட்டுவிட்டாள் ரேகா.போகும் பாதையில் நண்பி லயவேணியை சந்திக்க வேண்டும். அவளுக்கும் காடு வா வீடு போ என்கிற வயது. அவளும் இந்த இடமாற்றத்திற்குள் அகப்பட்டவள். அவளுடைய மனநிலையை அறிய வேண்டும் என்ற ஆவல். காலையில் ரீ குடிக்காதது வேறு களையாக இருந்தது. ஆனாலும் ரீ குடித்து ஐந்து நிமிடங்களை அநியாயமாக்க விரும்பாதவளாக புறப்பட்டுவிட்டாள்.

பாதைகள் அகலமாக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருந்தமையால் வீதி ஓரங்களில் சனநெரிசல் அதிகமாகக் காணப்பட்டது.

வழமையாக குறிப்பிட்ட இடத்தில் முன்பின் இருவரும் சந்தித்துக் கொள்வார்கள். அந்த இடம் தாண்டிவிட்டது.நண்பி லயவேணி தென்படவில்லை. 'லீவாக இருக்குமோ' எண்ணிய மறுகணம் மரமண்டையில் ஒரு செய்தி உறைத்தது.

லயவேணியைச் சந்திக்க வேண்டும் என்ற நினைப்பு உந்த ஐந்து நிமிடங்கள் முன்பதாகப் புறப்பட்டுவிட்டாள் ரேகா.அவ்வாறிருக்க வழமையாகச் சந்திக்கும் இடத்தில் எவ்வாறு சந்தித்துக் கொள்வாள்? பாடசாலை வளைவை நெருங்கவும் லயவேணி தென்பட்டாள்.

'அப்பாடா' என்றது மனது. மோட்டார் பைக்கில் வந்தவளை நிறுத்திக்கொண்டாள் ரேகா.

'பஸ் ரூட்தானே,ஏன் சைக்கிளிலை போறனீர்?' அக்கறையுடன் வினவினாள் லயவேணி.

'பஸ் எனக்கு ஒத்துவராது.நாங்கள் படுகிற மன உளைச்சலுக்கு மத்தியில் கெண்டக்டரும் நாய் போல நடத்தினால் நாங்கள் பேயளாய் மாறவேண்டும். உதெல்லாம் வேண்டாம் என்று தான்...' உள்ளம் சிரிக்காவிடினும் உதடு சிரிக்கக் கூறினாள் ரேகா.

'சரி,சரி!எப்படி புது ஸ்கூல்?' இடைமறித்தாள் லயவேணி.

'உனக்கென்ன நீ கலாதியாய் போறாய்...' பெருமூச்செறிந்தாள் ரேகா.

'கலாதியோ! நான் தூரக்குப்போடாமல் இருக்கிறன் என்று சந்தோசப்படு' லயவேணியின் குரலில் ஒரு ஏற்றமும் எரிச்சலும் கலந்து கொண்டது.

'நாங்கள் ஒரு சிலர் தான் உந்த இடமாற்றத்துக்குக் கட்டுப்பட்டு விண்ணப்பிக்காத பாடசாலை போட்டும் கடிதம் கிடைச்ச மறுநாளே போய் நிண்டம். உங்கை எத்தனை கூத்துக்கள் நடக்குது தெரியுமே. தங்கள் தங்களுக்கு வசதியான இடங்களைக் கேட்டு மாறுதுகள்' அழாக்குறையாகக் கூறினாள் ரேகா.

'உதுமட்டுமே ரேகா பெரும்பான்மையினத்தவர் சிறுபான்மை இனத்தவர் என்று ஆசி யாற்றிய எங்கடை கந்தவனம் பிரின்சிப்பல் பெரும்பான்மை சமூகம் வசிக்கிற ஒரு பாடசாலை அதிபர் வெற்றிடத்திற்கு விண்ணப்பித்திருக்கிறார். பொருத்தப்பாடற்ற காரணங்களை ஏதோவிதமாக பொருந்தக்காட்டி அவருக்கு அந்தப் பாடசாலையைக் கொடுக்காது புறக்கணித்துவிட்டார்கள்.'

ரேகா ஒருவித தவிப்புடன் கூற 'நீ என்ன குழந்தைப்பிள்ளை மாதிரி கதைக்கிறாய். எங்கடை வலயத்தில் ஒரு பாடசாலைக்கு ஒரு ஆசிரியர் தான் அதிபர் வெற்றிடத்திற்கு விண்ணப்பித்தவர். அவர் சிறுபான்மையினத்தவர் என்று ஆசிரிய ஆலோசகர் ஒருவரைப் போடவில்லையே.எங்கை உந்த பாகுபாடில்லை. ஏன் உந்தப் போராட்டங்



ரியர்களும் வகைப்படுத்தப்பட்டு மாற்றங்கள் பரிசீலனைக்குட்படுகுதாம்' லயவேணி ஒத்து ஊதினாள்.

இருவரது உள்ளங்களும் அழுதுகொண்டமையால் நிமிடக்கம்பிகளின் சுழற்சியை இருவரும் கவனிக்கத் தவறிவிட்டார்கள். அருகிலுள்ள பாடசாலையின் ஆயத்தமணி ஒலித்தது. இருவர் மனதிலும் பதகளிப்பு.

'பேசாமல்-இரண்டுபேரும் லீவு எடுப்பமே. ஏதோ விசரா இருக்கடி' லீவு எடுப்பதை புறக்கணிக்கும் ரேகா சோகத்துடன் வினவ லயவேணியும் சம்மதிக்க இருவருமாக நின்ற இடத்திலே அவர்களின் பேச்சுவார்த்தை சுதந்திரமாக தொடர்ந்தது.

'லயவேணி!இப்ப மட்டுமல்ல.இந்த சாபக்கேடுகள் வழிவழியாய் வருகுதடி. இப்ப இரண்டு வருசம் இருக்கும். அதிபராய்க் கடமை

கள் கூட சிதறடிக்கப்பட்டதுக்கு உதுதானே காரணம். பெரிய பதவிகளுக்கு வரவிடமாட்டான்கள். ஏதோ தகைமையில் வந்துவிட்டாலும்... மிச்சம் உனக்குத் தெரியும்தானே'.

லயவேணி ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தாள்.

'சரி,சரி இதுகளுக்கெல்லாம் மேலிடம் எண்டு ஒண்டும் இல்லையேய?அங்கை முறையிட்டால் என்ன?'

'மேலிடமோ அவையும் உவைதானே! எங்கை நியாயம் கிடைக்கும்'.

'சரி,சரி பத்து முப்பது ஆகுது. எங்களை நம்பி ஒரு சமுதாயம் இருக்குது. அரை நாள் வேலையாவது செய்வம்'.

ரேகா கூற அவரவர் உள்ளக் கொதிப்புடன் விடைபெற்றுக்கொண்டார்கள் இருவரும்.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காதல்



வண்டுக்கு காதல் பூவின் மீது
பண்ணுக்கு காதல் இசையின் மீது
மயிலுக்கு காதல் மழையின் மீது
ஆணுக்கு காதல் பெண்ணின் மீது

சுபா, மானிப்பாய்.

# தடுமாறும் மனது

உயிர் கொண்ட
நம் உறவு
உன் சந்தேக
நோயால்
சமாதிக்கு
சமர்ப்பணமான
போதும்!

என் இதயத்தில்
மல்லிகையாய்
படர்ந்த – உன்
நினைவெனும்
மொட்டுக்கள்
புஷ்பமாய் மலர்கின்றன
இரவின் மடிகளில்!

தூக்கத்துக்கு
விழிகள் தூது
சொன்னாலும்!
என் உன் மனம்
மட்டும் – உன்
நினைவுச் சுமைகளால்
தடுமாறுகின்றன...
தினம்... தினம்...!!

கே.எம்.சம்ஸ்,
பரகடுவ.

# இதயக் கல்லறையின் மௌனமொழி

உன் மௌன மொழிக்குள்
சிக்கிக் கொண்ட என்
உள்ளம்
மரணிக்கும் போதும் உன்
எண்ணத்தை சுவையாக
சுமக்கும்
உன் ஊமைப் பாஷைக்குள்
ஒழிந்து கொண்ட
என் இதயம்
உனது ஒரு பார்வைக்காய்
உயிர்ப் பிச்சை கேட்கும்
மருண்ட உன்
விழியிரண்டை
இமை அணைக்கும் ஓசை
கவிதையாக கேட்கும்
என் இதயக்
கல்லறையில்....

பண்டிதன், கட்டுவன்,

# தமிழுக்கு...

வாழ்த்திய காலம் முடிந்து
வசை பாடும் காலம் தொடங்கியுள்ளது

படித்தவர்கள் தமது சுயநல
நோக்கோடு மொத்தத்
தமிழையும் விலை பேசுகிறார்கள்

அறிவாளிகளே!
இமைதூக்கி விழித்துக் கொண்டார்கள்
கொப்பாட்டன் காலத்தில்

இன்று எமது காலத்தில்
விலை போகிறது

வரும்கால சந்ததிக்கு அடிமை
மொழியா தமிழ்

நான் அழியலாம் நாங்கள் அழியலாமா
வேண்டாம் மானிடா
பாமரராகிய எம்மை தின்று
விடாதே தமிழனாகவே
வாழப் பார்...!

கனகாம்பிகை, வினோ.கி.

# வெறுப்பு

மார்கழியில் குளிச்சுப்
பார்த்தேன்
குளிரு பழகிப் போச்சு
மாதவனா வாழ்ந்து பார்த்தேன்
வறுமை பழகிப் போச்சு
பாயில்லாமல்
படுத்துப்பார்த்தேன்
தூக்கம் பழகிப் போச்சு
சந்தோஷத்தை வெறுத்துப்
பார்த்தேன்
சாவுபழகிப் போச்சு
என் காதலை நினைச்சுப்
பார்த்தேன்
உன் நினைவு படிஞ்சு போச்சு
இன்று என் மனசு உன்னால்
துருப்புடிச்சுப் போச்சு

ர.கீதா,
சுன்னாகம்.

# மறுக்க முடியாத உண்மை

காரணமில்லாமல்
காரியம் நிகழா
கற்பனை எழாமல்
கவிதை தோன்றா!

சாளர மில்லாமல்
வீட்டினுள்ளே
காற்றோட்டம்
நுழையா!

தேடாத போது
பொருள் கிடைக்கா
கேட்காத போது
எதுவும் கிடைக்கா!

தட்டாத போது
திறக்கப்படா
தீட்டாத விடத்து
கூர் ஆகா
சட்டத்தை
வரையாமல்
நீதி தோன்றா
சந்தேகம் குடி
கொண்டா
சந்தோசம் வரா!

கண்கண்ட தெய்வம்
அன்னை, பிதா
கரை காண முடி
யாது
கல்வி உலா!

கவிக்குயிலன் –
சேனையூர்



# குடை

மூலையில் கிடந்த நான்
தூசுதட்டி
துடைத்தெடுத்து
புதுப்பிக்கப்படுகிறேன்
மழைக்காலம் என்பதால்

கற்பிட்டி வஹாப்

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
Saturday மெயில்
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு–15
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைத்தாய் வடிக்கும் கண்ணீர்

கரிய உருவத்துடன் எழுந்து நிற்கும் பட்டத்து யானைகள் அவற்றைக் கௌரவப்படுத்த போர்த்திய பட்டாடை போல பரவி நிற்கும் பசுமை அதன் மீது வெள்ளியை உருக்கி ஓடவிட்டது போல ஆர்ப்பரித்து நுரைகளோடு ஓடிவரும் தண்ணீர்.

இந்திய மலைகளையும் அவற்றின் மீதுள்ள பசும் மரங்கள் மற்றும் தாவரங்கள் அவற்றினூடே பேரிரைச்சலுடன் கொட்டும் அருவிகள் ஆகியவற்றை இப்படித்தான் வர்ணிக்கத் தோன்றுகிறது.

நாட்டிலேயே தமிழகத்தில் தான் அருவிகள் அதிகம். தமிழகத்துக்கு அடுத்தபடியாக மகாராஷ்டிரம்,கர்நாடகம் ஆகியவற்றில் அருவிகள் உள்ளன.மலைகள் அதிகம் உள்ள கேரளத்தில் கூட 17 அருவிகள் தான் உள்ளன.

இயற்கை அன்னை வாரி வழங்கிய கொடையாக தமிழகத்தில் 69 இடங்களில் அருவிகள் உள்ளன.இதில் தர்மபுரி,நாமக்கல்,சேலம் ஆகிய மாவட்டங்களில் தலா 1,தேனியில் 2, விருதுநகர்,வேலூர் ,பெரம்பலூர் ஆகியவற்றில் தலா 3, கன்னியாகுமரியில் 4, கோவையில் 5, நீலகிரியில் 9, நெல்லை,திண்டுக்கல்லில் தலா 17 என்ற எண்ணிக்கையில் அருவிகள் உள்ளன.

இவற்றில் குளு குளு சாரல் , வானில் குவிந்திருக்கும் மேகங்கள் உடலுக்குள் புகுந்து உள்ளத்தைக் குளிரவைக்கும் தென்றல் என இப்போது களைகட்டி நிற்கிறது பொதிகை மலைப் பகுதி அருவிகள்.குற்றாலமும் அதை ஒட்டிய அனைத்து இடங்களும் இப்போது இயற்கையுடன் இணைந்து குளிக்க விரும்புவோருக்கு சொர்க்கமாகவே காட்சியளிக்கின்றன.

ஆனால், இந்தச் சொர்க்கத்தை நரகமாக்குவது போல அங்கு செல்வோர் நடந்து கொள்வதைக் காணும்போது அருவிகள் என்பது மலைத்தாய் வடிக்கும் கண்ணீரைப் போலவே காட்சி தருகின்றன.

குற்றாலத்திலும் அதைச் சுற்றிய பாபநாசம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அருவிப் பகுதிகளுக்கும் இப்பொழுது தினமும் சுமார் 25 ஆயிரம் பேர்வரை வந்து செல்வதாகக் கூறப்படுகிறது.அரசு விடுமுறை மற்றும் வார விடுமுறை நாள்களில் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேலான வெளியூர்க்காரர்கள் வந்து செல்வதாகக் கூறுகிறார்கள்.சுற்றுலா வழிகாட்டிகள் வீட்டில் கிடைக்கும் நீரில் சோப்பு செயற்கை பவுடர்,ஷாம்பு



என வேதியியல் பொருள்களைப் பயன்படுத்தி உடலைச் சுத்தம் செய்தே பழக்கப்பட்டோருக்கு மாறுதலுக்கான இடமாகவே அருவிகள் உள்ளன.

பேரிரைச்சலுடன் மலை மீதிருந்து பூமி நோக்கிப் பாயும் அருவியில் குளிப்பது என்பதே தனிச்சுகம் தான். இதற்காகத் தான் அனைவருமே குற்றாலம் உள்ளிட்ட அருவிகள் உள்ள இடங்களை நோக்கி, ஆண்டு தோறும் படையெடுக்கின்றனர். ஆனால் அருவிகளில் குளிக்கச் செல்வோர் இயற்கையுடன் ஒன்றிச் செல்வதில்லையே ஏன்?

வீட்டில் வேதிப் பொருட்களைப் பயன்படுத்துவதால் அதைப் பயன்படுத்துவோருக்கும் அந்த வீட்டுக்கும் சுகாதாரச் சீர்கேடு என்ற அளவில் நின்றுவிடும்.ஆனால், அருவியில்,சோப்பு,ஷ[illegible]டுத்துவோரால் அவர்களுக்கு மட்டுமல்ல அருவி சார்ந்த அனைத்து உயிர்களுக்கும் அல்லவா பிரச்சினை ஏற்படுகிறது.

அருவி நீர் வழிந்தோடும் பகுதியில் வாழும் அனைத்து ஜீவ ராசிகளும் அல்லவா,இயற்கை நீரைக் குடிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

அருவி என்பது மலையில் வழிந்தோடுவதுடன் நின்று விடுவதில்லை.அதற்குப் பிறகு பல நிலைகளைக் கடந்து ஆறு,குளம்,கண்மாய் என அனைத்து நீர் நிலைகளிலும் சென்று சேருகின்றன.

அருவி நீரில் செயற்கை வேதிப் பொருள்களைக் கலந்து விடுவதால் நீரே அசுத்தமாகி விஷத்தன்மையாகிறது.கண்ணில்பட்டால் எரிச்சலையும்,வாயில் பட்டால் கசப்புடன் மயக்கத்தையும் தருகிற 'ஷாம்பு' அருவி நீரில் கலக்கும் போது அதை அருந்தும் பல்லாயிரக்கணக்கான நுண்ணுயிர்கள் மடியும் நிலை ஏற்படுமல்லவா?பெரிய விலங்கினங்கள் கூட பாதிப்புக்கு உள்ளாகின்றன என்பதும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களது ஆதங்கம்.

குற்றாலத்தில் போய் குளித்தாலும் அங்கு பெரும்பாலானோர் குடிப்பது என்னவோ,வெளிநாட்டு நிறுவனம் அடைத்து விற்கும் போத்தல் நீரைத்தான். அப்படி அருவி நீரைக் குடிக்க நாமே அச்சப்படும் வகையில் அசுத்தப்படுத்தியது யார்? விலங்கினங்களோ,பறவைகளோ அல்லது மனிதர்களாகிய நாம் தானே!

குற்றால அருவிகளில் என்றைக்கு ஷாம்பு உள்ளிட்டவற்றைப் பயன்படுத்தத் தொடங்கினார்களோ அன்றிலிருந்தே அருவி நீரைக் குடிக்கும் குரங்குகளின் எண்ணிக்கை கூட குறைந்துவிட்டது என கூறப்படுகிறது.

குளிக்கப் போகிறோம் என்ற போர்வையில் குற்றாலத்துக்குப் போகும் பெரும்பாலான இளைஞர்கள் குடிபோதையில் அநாகரிகமாக நடப்பதும் நாகரிகத்தை மறந்து அரைகுறை ஆடையுடன் அலைவதும் சமீபகாலமாக அதிகரித்து உள்ளது.

மொத்தத்தில் குற்றலாத்துக்குக் குடும்பத்துடன் போனால் நிம்மதியாகக் குளிக்க முடியாது என்பதுடன் மனைவி மக்களுடன் செல்வது நல்லதல்ல என்ற எண்ணமே ஏற்படுகிறது.

கடந்த பல ஆண்டுகளாக குற்றாலத்தில் முக்கிய பிரமுகர்கள் குளிக்கப் பயன்படுத்திய பழத்தோட்ட அருவியில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளால் அங்கு யாருமே குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆகவே, அருவியில் குளிக்கச் செல்வோர் அதை இயற்கைத் தாயின் வரப்பிரசாதமாகக் கருதவேண்டும் அன்றி அசுத்தம் செய்யக் கிடைத்த இடமாகக் கருதக்கூடாது.அருவியில் குளித்து ஆனந்தத்தை இப்போது நாம் அனுபவிப்பது போல் நமது வருங்காலச் சந்ததியினரும் அந்த அனுபவத்தைப் பெறவேண்டும்.அதற்கு அருவிகளையும் அவை சார்ந்த உயிரினங்களையும் காப்பது நமது கடமை என்பதை அனைவரும் உணர வேண்டும்.

-தினமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செவாக் சதமடிப்பதைத் தடுக்க இலங்கை சுழற்பந்து வீச்சாளர் சுராஜ் ரந்திவ் 'நோ-போல்' வீசினார். இதனால் அவரால் சதமடிக்க முடியாது போனது. இலங்கை வீரரின் இந்தச் செயலை இந்தியாவின் அனைத்து முன்னாள் முன்னணி வீரர்களும் கடுமையாகச் சாடி வருகின்றனர்.



# இது நடந்திருக்கக் கூடாது



இந்த நிலையில் சௌரவ் கங்குலி இதுகுறித்துக் கூறுகையில்;

ஒரு ஆடுகளத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற அடிப்படை நாகரீகம் கூடத் தெரியாதவர்கள் இலங்கை வீரர்கள். இவர்களை ரசிகர்கள் புறக்கணிக்க வேண்டும்.

விளையாட்டில் வெற்றி, தோல்வி சகஜம். முதலில் அதைப் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கை வீரர்கள் எப்போதுமே நாகரீகம் தெரியாதவர்கள். வெற்றி பெறும் போது ஆர்ப்பரிக்கும் அவர்கள் தோற்கும் நிலையில் இருந்தால், எது வேண்டுமானாலும் செய்வார்கள்.

செவாக் சதம் அடிக்கக் கூடாது என்று வேண்டுமென்றே நோ-போல் வீசி கிரிக்கெட்டை அவமதித்து விட்டார்கள். கப்டன் மற்றும் சக வீரர்கள் சொல்லாமல் ரந்தீவ் அப்படி செய்திருக்க மாட்டார்.

ஒரு முறை கண்டி டெஸ்டில் நான் 98 ஓட்டங்கள் எடுத்திருந்தேன். அப்போதும் நோபோல் வீசி என்னை சதமடிக்க விடாமல் தடுத்தனர். சச்சின் டெண்டுல்கர் ஒரு போட்டியில் 98 ஓட்டங்கள் எடுத்திருந்தபோதும் இதேபோலத்தான் செய்தனர். இப்படிப்பட்ட வீரர்களை ரசிகர்கள் புறக்கணிக்க வேண்டுமென்றார் கங்குலி.

**தடை விதிக்க வேண்டும்;** விளையாட்டு உணர்வுக்கு எதிராக செயற்பட்ட ரந்தீவுக்கு 5 போட்டிகளில் பங்கேற்க, ஐ.சி.சி. தடை விதிக்க வேண்டுமென இந்திய அணியின் முன்னாள் வீரர் பிஷன் சிங்பேடி வலியுறுத்தியுள்ளார்.

இவரது தவறான செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள பிஷன் சிங்பேடி, வேண்டுமென்றே தவறு செய்துள்ளார் ரந்தீவ். செவாக் சதத்தை தடுப்பதற்காக நோ-போல் வீசியுள்ளார். விளையாட்டு உணர்வை குழிதோண்டி புதைத்த இவருக்கு 5 போட்டிகளில் பங்கேற்க ஐ.சி.சி. தடை விதிக்க வேண்டுமென்றார்.

**கிர்மானி:** ரந்தீவ் சிறப்பாக பந்துவீசக்கூடியவர். இவருக்கு சேவக்கின் விக்கெட்டை வீழ்த்தும் திறமை உள்ளது. இந்நிலையில் 'நோ-போல்' வீசியதற்குப் பதில், அவரது சதத்தை தாமதப்படுத்தியிருக்கலாம். மொத்தத்தில் ரந்தீவின் செயல் மன்னிக்க முடியாத குற்றம்.

**சந்துபோர்டே;** இவ்விடயத்தில் எந்த ஒரு அணியையும் குறிப்பிட்டு குற்றம் சுமத்த முடியாது. இந்தியா உட்பட உலகின் அனைத்து அணிகளுமே இதுபோன்ற பல துடுப்பாட்ட வீரர்களின் சதத்தை தடுத்த சம்பவங்கள் நடந்துள்ளன. உதாரணமாக 1958-59 இல் மேற்கிந்தியாவுக்கு எதிரான டெஸ்டின் முதல் இனிங்ஸில் சதம் அடித்த என்னை இரண்டாவது இனிங்ஸில் (96) சதமடிக்க விடாமல் பவுன்சராக வீச 'ஹிட்- விக்கெட்' முறையில் ஆட்டமிழந்தேன். அதேபோட்டியில் கேரிசோபர்சை (199) இரட்டைச் சதம் அடிக்கவிடாமல் நாங்கள் தடுத்தோம். இது போன்ற பல சம்பவங்கள் நமது உள்ளூர் கிரிக்கெட்டில் கூட உள்ளன.

**மதன்லால்:** முக்கியமான போட்டியில் கடைசிவரை ஆட்டமிழக்காமலிருந்து அணியின் வெற்றிக்கு செவாக் உதவியதை வரவேற்கிறேன். அதேநேரம் ரந்தீவின் செயல் மோசமானது. இது விளையாட்டு உணர்வுக்கு எதிரானது. கப்டன் சங்ககாரா சொன்னதால் இது நடந்ததா அல்லது ரந்திவ் திட்டமிட்டு செயற்பட்டாரா எனத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரையில் இதுபோல் நடந்திருக்கக் கூடாதென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை எவராலும் கணிக்க முடியாது



சாம்பியன்ஸ் லீக்-20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் இலங்கையின் வயம்பா அணி (வடமேல் மாகாண அணி) ஆச்சரியமளிக்கும் வகையில் செயற்படுமென்று மஹேல ஜெயவர்தன கூறியுள்ளார்.

'ஏர்டெல்' இரண்டாவது சாம்பியன்ஸ் லீக் 20 கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் அடுத்த மாதம் (செப்டெம்பர்) 10ஆம் திகதி முதல் 26ஆம் திகதிவரை நடக்கிறது. சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் மற்றும் தென்னாபிரிக்கா, இலங்கை, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, மேற்கிந்தியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 7 உள்ளூர் அணிகளும் கலந்துகொள்கின்றன.

இந்தப் போட்டியில் இலங்கையிலிருந்து 'வயம்பா' அணியும் பங்கேற்கிறது. இந்த அணியில் இடம்பெற்று விளையாட இருக்கும் துடுப்பாட்ட வீரர் மஹேல ஜெயவர்தன அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது;

வயம்பா ஆபிரிக்கா கண்டத்தில் உள்ள பகுதி என்று பலருக்கும் நினைக்கத் தோன்றும். இது இலங்கையில் பல விடயங்களுக்கு பெயர்போன பகுதியாகும். குறிப்பாக இங்குள்ள தென்னந்தோப்புகள் பிரசித்தி பெற்றதாகும். வயம்பா எங்கிருக்கிறது என்று யூகிப்பது எப்படி கடினமாக இருக்கிறதோ அதுபோல் எங்களது வயம்பா அணியின் வெற்றி வாய்ப்பையும் மற்றவர்களால் கணிக்க முடியாது.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நாங்கள் நல்ல நிலையை எட்டுவோம். கடந்த ஆண்டு முதல் ஆட்டத்தில் டெல்லிடேர் டேவில்ஸுக்கு எதிராக பதற்றத்துடன் விளையாடினோம். எங்கள் அணியில் சர்வதேச போட்டியில் விளையாடிய அனுபவம் வாய்ந்த வீரர்கள் சிலர் இருந்தாலும் அவர்கள் சிறப்பாக விளையாடினார்கள் என்று சொல்ல முடியாது.

'வயம்பா' மாகாணத்தில் புகழ்பெற்ற 7 பாறைகள் உள்ளது போல் எங்கள் அணியில் பாறை போன்ற வலுவான 7 வீரர்கள் உள்ளனர். அவர்கள் ஜீவந்த குலதுங்க, ஜெகன் முபாரக், அஜந்த மெண்டிஸ், கசுரு உதான, விக்கெட் காப்பாளர் கௌசால் ஜனித், சகலதுறை வீரர் மக்ரூப், திசார பெரேரா ஆகியோராவர்.

இந்த ஆண்டு போட்டியில் மேலும் பல ஆச்சரியங்கள் வெளிப்படலாம். பல புதிய நட்சத்திர வீரர்கள் உருவானால் ஆச்சரியமில்லையென்றார்.




# தென்னாபிரிக்க வீரர்கள் ஜொலிப்பார்கள்

சாம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க வீரர்கள் அதிக ஓட்டங்கள் குவிப்பார்கள் என்று கிப்ஸ் கூறியுள்ளார்.

ஏர்டெல் இரண்டாவது சாம்பியன்ஸ் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் அடுத்த மாதம் (செப்டெம்பர்) 10 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடக்கிறது. சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் மற்றும் தென்னாபிரிக்கா, இலங்கை, மேற்கிந்தியா, அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 7 உள்ளூர் அணிகளும் கலந்து கொள்கின்றன.

இந்தப் போட்டியில் கடந்த ஆண்டு கேப் கோப்ராஸ் (தென்னாபிரிக்கா) அணிக்காக ஆடிய ஹெர்ஷல் கிப்ஸ் அந்த அணி இந்த முறை போட்டிக்குத் தகுதி பெறாததால் கிப்ஸ் வர்ணனையாளராகச் செயற்படுகிறார். இந்தப் போட்டி குறித்து அவர் கூறியதாவது;

ஐ.பி.எல்.போட்டியில் நட்சத்திர வீரர்கள் உதயமாகிறார்கள். ஆனால், சம்பியன் லீக் போட்டியில் அவர்களில் சிறந்தவர் யார் என்பது உறுதி செய்யப்படுகிறது. சாம்பியன் லீக் போட்டி மிகப் பெரிய போட்டியாகும். உள்ளூர் வீரர்கள் சர்வதேச வீரர்களாக உருவெடுக்க இந்தப் போட்டி நல்ல வாய்ப்பாக உள்ளது. கடந்த ஆண்டு போட்டியில் இதனை நான் கண்கூடாகப் பார்த்தேன்.

பிரபலமான வீரர்களால் அணிக்கு 2 விதமான தாக்கம் உண்டு. பிரபலமான வீரர்கள் அணியில் மற்ற வீரர்களுக்கு நம்பிக்கையளிக்கும் சக்தியாக விளங்குகிறார்கள். பிரபலமான வீரர் என்பதால் எதிர்பார்ப்புக்கு ஏற்ப விளையாட வேண்டிய நெருக்கடியும் அவர்களுக்கு இருக்கிறது. இருப்பினும் பிரபல வீரரால் அணியில் நம்பிக்கை அதிகரிக்கும். ஒரு பிரபல வீரர் தனது நாட்டு அணிக்காக விளையாடச் சென்று விட்டால் அவரது இடத்தை அணியினர் ஒற்றுமையுடன் கடினமாக உழைத்து நிரப்ப வேண்டும்.

கடந்த முறை எங்களது கேப் கோப்ராஸ் அணி சிறப்பாக விளையாடியது. 3 கேட்ச்களை கோட்டை விட்டதால் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் வாய்ப்புப் பறிபோனது. பதற்றத்தால் இந்தத் தோல்வி ஏற்பட்டது. தென்னாபிரிக்க அணிகளுக்குச் சொந்த நாட்டில் விளையாடுவதால் அதிக அனுகூலம் கிடைக்குமென்று நான் நம்பவில்லை.

மற்ற அணிகளில் இடம்பிடித்துள்ள வீரர்கள் கடந்த ஆண்டு தென்னாபிரிக்காவில் நடந்த ஐ.பி.எல்.போட்டியில் விளையாடியவர்கள் என்பதால் இங்குள்ள நிலைமை அவர்களுக்கு பரிச்சயம் ஆகியிருக்கும். தென்னாபிரிக்க களப்புகளில் திறமையால் பயன் கிடைக்கலாம்.

வாரியர்ஸ் அணியை பொறுத்தமட்டில் பந்து வீச்சு பலமாக உள்ளது. போத்தா, நிற்னி, தெரான் போன்ற முன்னணி வீரர்கள் உள்ளனர். சுழற்பந்தில் இங்ராம் முத்திரை பதிப்பார். கடந்த ஆண்டு நடந்த 40 ஓவர் மற்றும் 20 ஓவர் போட்டியில் அவர் நன்கு ஆடினார். அவர்களது ஆட்டங்கள் போர்ட் எலிசபெத்தில் நடப்பது உதவிக்கரமாக இருக்கும். ஹை வெல்ட் லயன்ஸ் அணியில் பந்து வீச்சு மற்றும் சமநிலையில் உள்ளது. கடந்த ஆண்டு இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற அனைவரையும் ஆச்சரியப்படுத்திய அணி இதுவாகும். துடுப்பாட்டத்தில் பீற்றர்சன், மெக்கன்சி, ஜார்ஸ்வெல்ட் ஆகியோரும் பந்து வீச்சில் ஆந்த்ரே நெல், பைரன்லிக் ஆகியோரும் ஜொலிப்பார்கள்.

கடந்த ஆண்டு சாம்பியன் லீக் போட்டிகளில் ஒருசில தென்னாபிரிக்க வீரர்கள் நிறைய ஓட்டமெடுத்தனர். இந்த ஆண்டும் அவர்கள் அதிக ஓட்டம் எடுத்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. நிறைய ஓட்டம் எடுப்பதற்காக நம்பிக்கையை பருவ நிலை ஏற்படுத்திக் கொடுக்குமென்றார்.

# புதிய அவதாரம்



இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அரங்கில், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் எழுச்சிக்கு இளம் வீரர் ரொபின் உத்தப்பாவின் பங்களிப்பு முக்கிய காரணம். இவரது பொறுப்பான ஆட்டம் பெங்களூர் அணியை, சாம்பியன்ஸ் லீக் ''ருவென்ரி-20'' தொடருக்கு அழைத்துச் சென்றது. கிரிக்கெட் அரங்கில் இவர், புதிய அவதாரம் எடுக்க காத்திருக்கிறார்.

2006 இல் இந்திய அணியில் இடம்பிடித்த உத்தப்பா, இதுவரை 38 ஒருநாள் (786 ஓட்டம்) 9 சர்வதேச ''ருவென்ரி-20''(149 ஓட்டம்) போட்டிகளில் விளையாடியுள்ளார். விக்கெட் காப்பாளராக பயிற்சிபெற்றிருப்பது இவரது கூடுதல் சிறப்பம்சம். தவிர இவர் ஐ.பி.எல்.தொடரில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியில் இடம் பிடித்துள்ளார்.

சிம்பாப்வே சென்ற இந்திய அணிக்கு தேர்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தோள்மூட்டுக் காயம் காரணமாக இவர் அதிரடியாக நீக்கப்பட்டார். பின்னர் இங்கிலாந்தில் சத்திர சிகிச்சை செய்துகொண்ட தன் மூலம் இவரது காயம் குணமடைந்து வருகிறது. இதன் மூலம் இவர் விரைவில் இந்திய அணியில் இடம்பிடிக்க வாய்ப்புள்ளதாக தெரிகிறது. மேலும் இவர், இனிவரும் காலங்களில் முழுநேர விக்கெட் காப்பாளர் மற்றும் துடுப்பாட்ட வீரராக ஜொலிக்க திட்டமிட்டுள்ளார்.

இதுகுறித்து உத்தபா கூறியதாவது;

சுமார் இரண்டு ஆண்டுக்கு பின் இந்திய அணியில் இடம்கிடைத்தபோதும், காயம் காரணமாக சிம்பாப்வே தொடரிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டது ஏமாற்றமளித்தது. தற்போது எனது காயம் குணமடைந்து வருவது மகிழ்ச்சியளிக்கிறது. விரைவில் இந்திய அணியில் இடம்பிடிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது.

இதற்கு அடுத்து நடக்கவுள்ள ரஞ்சி கிண்ணம், சாம்பியன்ஸ் லீக் ''ருவெனரி-20'' உள்ளிட்ட முக்கிய உள்ளூர் தொடரில் முழுதிறமையை வெளிப்படுத்தும் பட்சத்தில் தேசிய அணித் தேர்வாளர்களை கவர்ந்து விடலாம். தவிர, இனிவரும் நாட்களில் முழுநேர விக்கெட் காப்பாளராக செயல்பட திட்டமிட்டுள்ளேன்.

ஏனெனில் இந்திய அணியில் இடம் பிடிக்க ஏதேனும் கூடுதல் திறமை இருந்தால் நல்லது. எனவே விரைவில் எனது உடற்தகுதியை நிரூபித்து அடுத்து நடக்கவுள்ள அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இடம்பிடிப்பேனென நம்புவதாகவும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் தவிக்கும் பாகிஸ்தான்

## உலக வலம்

ச.துஷ்யந்தினி

ஆசியாவின் இவ்வருட பருவமழை கோடிக்கணக்கான மக்களை அநாதரவான நிலைக்குள் தள்ளிவிட்டுள்ளது.

மழைபெய்ய வேண்டி. பூஜைகள்,யாகங்களை நடத்திவரும் மக்களை அந்த மழையே பேரழிவுக்குள் இழுத்துச் சென்றுள்ளதை என்னவென்று வர்ணிப்பது?

வழமைக்கு மாறாக இவ்வருட பருவமழை பாகிஸ்தான்–இந்தியா தொடக்கம் வடகொரியா–சீனா வரையிலான நாடுகளின் பெரும்பாலான பிராந்தியங்களை வெள்ளத்தில் மூழ்கடித்துள்ளது. இதில் பாகிஸ்தானும் சீனாவும் பேரழிவுகளைச் சந்தித்துள்ளன.

எதிர்காலத்தின் மீதான நம்பிக்கை உள்ளிட்ட அனைத்து வாழ்வாதாரங்களையும் இழந்த நிலையில் கோடிக்கணக்கான பாகிஸ்தானியர்கள் தற்காலிக முகாம்களுக்குள் முடங்கியுள்ளனர்.

பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட ஐ.நா.பொதுச் செயலர் பான்–கீ–மூன் அங்கு கண்ட காட்சிகள் நெஞ்சை உலுக்குவதாகத் தெரிவித்துள்ளார்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் பாகிஸ்தானில் ஏற்பட்ட மிக மோசமான வெள்ளப் பெருக்கினால் 2 ஆயிரம் பேர்களது உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளதுடன் 2 கோடி மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

இவ்வனர்த்தத்திலிருந்து நாடு மீள்வதற்கு சுமார் 5 வருடங்கள் எடுக்குமெனவும் மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்கு 15 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவையெனவும் பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுதவிர வாந்திபேதி,வயிற்றோட்டம் போன்ற தொற்றுநோய்கள் பரவும் அபாயம் அதிகரித்திருப்பதாக எச்சரித்துள்ள சுகாதார அதிகாரிகள் இலட்சக்கணக்கான மக்களிடையில் இது வேகமாகப் பரவும் ஆபத்து நிலவுவதாகவும் 35 இலட்சம் சிறுவர்கள் இவ் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இத்தொற்றுநோயினாலும் உணவுப் பற்றாக்குறையினாலும் பாகிஸ்தான் இரண்டாவது கட்ட மரணத்தை எதிர்கொண்டுள்ளதாக ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான அதிகாரியொருவர் எச்சரித்துள்ளார்.சுமார் 60 இலட்சம் மக்கள் நோய் தாக்கும் அபாயத்திற்குள் சிக்கியிருப்பதாக இவர் மதிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பாகிஸ்தானுக்கு அவசர உதவியாகத் தேவைப்படும் 460 மில்லியன் டொலர் தொகையில் மூன்றிலொரு பகுதி மட்டுமே தற்போது சேகரிக்கப்பட்டுள்ளதாக ஐ.நா.தெரிவித்துள்ளது.

பாடசாலைகள்,மருத்துவமனைகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

மேலும் உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதிக்கான பயிர்ச் செய்கைகளும் பெருமளவில் அழிவடைந்துள்ளன.

மீள் கட்டுமானத்திற்கான உதவிகள் சாத்தியமானளவு விரைவில் கிடைக்காதவிடத்து அது தீவிரவாதம் மற்றும் பிராந்திய ஸ்திரமின்மை அதிகரிப்பதற்கு



வழிவகுக்குமென பாகிஸ்தான் அதிகாரியொருவர் எச்சரித்துள்ளார்.

வீடு,நிலம்,பயிர்ச்செய்கை என அனைத்தையும் இழந்து பஞ்சாப்பிலுள்ள தற்காலிக முகாமொன்றில் 3 பிள்ளைகளுடன் தஞ்சமடைந்துள்ள பெண்ணொருவர் தமது குடியிருப்பு பகுதி ஆறாகக் காட்சியளிப்பதாகவும் தனது வீடு முன்பு எங்கிருந்தது என்பதைக் கண்டறிவதற்கு எவ்வித வழியும் இல்லை எனக் கூறியுள்ளார்.

சிந்து,பஞ்சாப் மாகாணங்கள் மற்றும் நாட்டின் வடமேற்கு பகுதி என்பனவே வெள்ளத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் வளர்ச்சிக்கான இயந்திரமாக இருப்பது பஞ்சாப் மாகாணமே எனத் தெரிவித்துள்ள அம்மாகாண முதலமைச்சர் ஷபாப் ஷெரீப் இவ் இயந்திரம் நீண்ட காலத்திற்கு இயங்காமல் இருந்தால் அது நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துமென எச்சரித்துள்ளார்.

இதேவேளை வெள்ளத்தில் ஏற்பட்டுள்ள அழிவுகளை சொற்களினால் விபரிக்க முடியாதெனத் தெரிவித்துள்ள தன்னார்வ பணியாளரொருவர் :

நான் அழிவுகளை நேரில் சென்று பார்த்தேன்.உண்மையில் அவை பயங்கரமானவை.11 வருடங்களாக நான் இப்பணியைச் செய்கிறேன்.ஆனால் இது போன்ற பேரழிவுகளை நான் முன்னெப்போதும் பார்த்ததில்லை.மோதல் வலயங்களிலேயே நான் அதிகளவில் பணியாற்றியுள்ளேன்.இயற்கை அனர்த்தமொன்றின் பேரழிவுகளை நான் நேரில் காண்பது இதுவே முதல்முறை.உண்மையில் இதனை வார்த்தைகளால் விபரிக்க முடியாதெனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் மக்களுக்கு 76 மில்லியன் டொலர்கள் உதவியினை வழங்க முன்வந்துள்ள அமெரிக்கா இதைவிட மேலதிகமாக 4.1 மில்லியன் டொலர்களை சிறுவர்களின் பாதுகாப்புக்கு வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

இதேவேளை பாகிஸ்தானின் மீள் கட்டுமாணப் பணிகளுக்கு 900 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனுதவியை வழங்கவுள்ளதாக உலகவங்கி தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் அவசரமாகத் தேவைப்படும் 460 மில்லியன் டொலர்களில் மூன்றிலொரு பங்கையே தற்போது திரட்ட முடிந்துள்ளதாக ஐ.நா.தெரிவித்துள்ள நிலையில் தலிபான்களின் ஆதிக்கம் மற்றும் ஊழல் நடவடிக்கைகள் என்பவற்றால் உதவிகளை வழங்குவதற்கு உலக நாடுகள் பின்னடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## குடியிருப்புகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கும் கொடூரம்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் ஆதரவை வெற்றி கொள்வதற்காக மிக வேகமாக நிவாரண உதவிகளையும் தன்னார்வ பணிகளையும் தலிபான் போராளிகள் முன்னெடுத்து வரும் நிலையில் இந்நெருக்கடி நிலையை தலிபான்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்களென உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் தெரிவித்துள்ளார்.

மேலும் சர்வதேச சமூகத்தினால் வழங்கப்படும் எந்தவகையான உதவியும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுமெனத் தெரிவித்துள்ள அமைச்சர் நிதியுதவிகள் பயன்படுத்தப்படும் வழிமுறைகளை மேற்பார்வை செய்வதற்கு சர்வதேச கணக்காய்வாளர்களை பணியில் அமர்த்தப் போவதாகவும் கூறியுள்ளார்.

இதற்கிடையில் இந்து நதியின் நீர்மட்டம் அதிகரித்து வருவதன் காரணமாக நாட்டின் வடமேற்குப் பகுதியில் புதிய வெள்ள அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழையின் காரணமாக ஆறுகள் பெருக்கெடுக்கும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன.மேலும் இலட்சக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு உயர்வான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீதிகள்,பாலங்கள் என்பன வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருத்தல் மற்றும் மண்சரிவுகள் என்பன அகதிகளுக்கான விநியோக நடவடிக்கைகளுக்கு இடையூறுகளை விளைவித்துள்ளன.

நாடு வெள்ள அனர்த்தத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தபோது ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி ஐரோப்பிய சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டிருந்தமை தொடர்பில் ஏற்கனவே கோபத்திலிருந்த மக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் மிகத் தாமதமாகவே சென்றடைவதனால் அரசாங்கத்தை மேலும் கடுமையாக விமர்சித்து வருவதுடன் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

பயங்கரவாதத்திற்கெதிரான போர் என்ற பெயரில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளால் ஏற்கனவே இன்னல்களை அனுபவித்துவரும் மக்களை இயற்கையும் மிக மோசமாகவே சோதித்துள்ளது.

அனைத்து வழிகளினாலும் பாதிக்கப்பட்டு செய்வதறியாது திகைத்து நிற்கும் மக்களுக்கு விடிவு என்பது தொடர்ந்தும் எட்டாக்கனியாகவே இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்பத்திரிகை தினக்குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு [illegible] 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org